
பாக்கெட்
நாவல்
ரூ.10
நீ வருவாய் என!
இந்திரா சௌந்தர்ராஜன்

# நீ வருவாய் என!



இந்திரா சௌந்தர்ராஜன்



## 1

'மறுஜென்மமாவது புடலங் காயாவது...?

மனிதனோ இல்லை அது எந்த விதமான உயிரினமோ... அவ்வளவும் குறிப்பிட்ட கரு முட்டையில் இருந்து தோன்றுபவை. மரபுவழிச் சம்பந்தம் உடையவை.

எனவே இறந்து சாம்பலான ஒருவர் திரும்ப அந்த வடிவில் வருவதெல்லாம் அப்பட்டமான கப்ஸா!'

- விஞ்ஞானி விவேக சுந்தரம்

அலுப்போடு போய் கம்ப்யூட்டர் முன் அமர்ந்தாள் அகிலா! ஜீன்ஸ் பேண்ட், டி ஷர்ட். அதில் - 'Keep Dreaming' எனும் குழப்பமான வாசகம்!

அகிலா இந்தக் காலத்து இருபத்தி நாலு வயதானவள்...

எனவே தலைவாரி, ரிப்பன் வைத்துக் கட்டி சமாச்சாரங்களுக்கெல்லாம் அவளிடம் மூச்ச்... இடமேயில்லை!

தலையை வாராத படி அலையாட்டம் ஓட விட்டால்தான் அவள் அழகான சென்னைப் பெண்!

அது முகம் மறைத்து விழுவதென்பது ஒரு இன்ப அவஸ்தை. விலக்கி விட்டுக் கொண்டே இருக்கத்தான் கைகள்.

நடு நடுவே கீபோர்டை தட்டி திரைக்கு உயிர்தந்து

படிக்கத் தொடங்கனாள்.

அகி...

உனக்கொரு ஹாட் நியூஸ்!

சென்னையில் இருந்து ஊத்துக்கோட்டை செல்லும் மார்க்கத்தில் மாம்பாக்கம் என்று ஒரு கிராமம். இந்த கிராமத்தில் அறுபது வயது நிரம்பிய ஞானசுந்தரம் என்பவர் ஐம்பத்தைந்து வயதான தனது மனைவியோடு சேர்ந்து ஒரு பிள்ளை பெற்றுக் கொள்ளப் போகிறார். இதுவரை உனக்கு ஆச்சரியமாகவோ இல்லை அதிசயமாகவோ எதுவுமில்லை தான்... சற்று வயதானவர்களால் எப்படி பிள்ளை பெறமுடியும் என்று நீ நினைக்கலாம். ஆரோக்யமாக இருந்தால் அது சாத்யமும் ஆகலாம்தான். ஆனால் இதற்குப் பின்னால் வேறு ஒரு விஷயம் உள்ளது. இவர்களுக்கு இருபத்தி ஆறு வயதில் சங்கரி என்று ஒரு பெண் இருந்தாளாம். அவளை சிலர் கற்பழித்துக் கொன்று விட்டார்களாம். கடைசி வரை கற்பழித்தது யார் என்று தெரியாமலே போய்விட்டது. அப்படி செத்துப் போன பெண் தான் திரும்ப வந்து பிறந்து சம்பந்தப் பட்டவர்களைப் பழிவாங்க விரும்புகிறாளாம்! ஞான சுந்தரம் கனவிலும், அவர் மனைவி பாக்யலட்சுமி கனவிலும் அந்தப் பெண் மாறி மாறி தோன்றி தான் திரும்பப் பிறக்க விரும்புவதைக் கூறியுள்ளதால் ஞானசுந்தரமும் தன் மனைவியோடு சேர்ந்து இப்பொழுது அந்த வயதான தாயும் கருத்தரித்திருக்கிறாளாம்! இதை ஊரே அதிசயமாகப் பார்க்கிறது. அந்த தாயும் 'சங்கரி வந்து பிறக்கப் போகிறாள். சம்பந்தப் பட்டவர்களுக்கு சாவு மணியும் அடிக்கப் போகிறாள்' என்று சொல்லி வருகிறார்.

ஒரு பத்திரிகையின் உதவி ஆசிரியரான உனக்கு இந்த செய்தி பயன்படும் என்று தோன்றியது.

அதனால் தான் அனுப்பியுள்ளேன்.

உட்கார்ந்த இடத்தில் 'கிராமத்து மூட நம்பிக்கை' என்று ஒதுக்கி விடாமல் களத்தில் இறங்கினால் உனக்கு அபூர்வமான பல தகவல்கள் கிடைக்கலாம். - அன்புடன் உன் தாரணி.



செய்தியை வாசித்து முடித்த அகிலா உதட்டில் ஒரு சுழித்த சிரிப்பு. இன்னொரு செய்தியும் மிச்சமிருந்தது. அதையும் பிரித்துப் பார்த்தாள். அது அகிலாவின் ஒரு பேட்டியைப் பாராட்டிய வழக்கமான கடிதம்.

இரு கடிதங்களுக்கும் திரையை அணைத்து மூடியவள் திரும்பினாள்.

போக்கிரி படத்தின் 'நான் அரபிக் குதிரையடா' பாட்டு யாருக்கும் ஞாபகம் வரும். அப்படித்தான் இருந்தாள்.

இன்று பெண்கள் இருவிதமாகத்தான் உள்ளனர்.

ஒன்று பிரமாத ஊட்டம், இல்லாவிட்டால் முருங்கை மெலிவு. எல்லாமே ரசாயன உரம் போட்டு விளைந்த உணவு வகைகளை சாப்பிட்டு வளர்வதன் தாக்கம். ஊட்டம் என்பதால் பலம் என்று அர்த்தமில்லை. மெலிவாக இருப்பதால் சக்திக் குறைவு என்று பொருளுமில்லை. தாயின் கர்ப்பத்துக்குள் இருக்கும் நாட்களால் நிகழும் தீர்மானங்கள் தான் அவை...

அகிலா அடுத்து எடுத்தது தனது செல்போனைத்தான்!

விஞ்ஞான உலகம் எவ்வளவோ கண்டு பிடித்திருக்கிறது. உண்மையான அலுக்காத அதிசயம் செல்போன் மட்டும்தான்!

பாட்டு கேட்கலாம். படம் பிடிக்கலாம். செய்தி அனுப்பலாம். பெறலாம். அலாரம் வைக்கலாம். டைரி போல குறிப்புகளை குறித்துக் கொள்ளலாம். அவ்வளவும் ஒரு சிறு சிகரெட் டப்பா சைசுக்குள் என்பதுதான் ஆச்சரியம். ஒருபடி மேலே போய் அதில் டி.வி.யே வந்துவிட்டது கூடுதல் பரிமாணம்!

'செல்போனில் அகிலா தேடிப் பிடித்தது அவளது 'அமுதம்' இதழின் அழுக்கு ரிப்போர்ட்டர் ஜான்சனை! (ஒரு வாரத்துக்கு ஒரு தடவை தான் குளிப்பான்... மழையில் நனைய நேர்ந்தால் அதுவும் கிடையாது.)

''ஜான்சன்.''

''சொல்லுங்கக்கா...''.

''டேய்... நான் உன் தங்கச்சிடா. என்னைவிட நீ மூனு வருஷம் பெரியவன்.''

''பொய் சொல்லாதீங்கக்கா... உங்க அறிவு, அனுபவம் இதுக்கெல்லாம் என் வரைல ஐம்பது வயசு.''

''டேய்... ஏற்கனவே எனக்கு ஜலதோஷம்டா... நீ வேற ஏண்டா என்னை இப்படி கொடுமைப் படுத்தறே...''

''தாயே! தயவுசெய்து விசயத்துக்கு வாங்க...''

''அக்காவான நான் அதுக்குள்ள தாயாகிட்டேனா?''

''உங்க வளர்ச்சி அப்படிங்கம்மா...''

''போதுண்டா... நீ அடங்காப்பிடாரன்கறது தெரிஞ்சும் நான் தான் தப்பா பேசிகிட்டே இருக்கேன்.''

''புரிஞ்சா சரி... விஷயத்துக்கு வாங்க.''

''சென்னைல இருந்து ஊத்துக்கோட்டை போற வழில மாம்பாக்கம்னு ஒரு வில்லேஜ் இருக்காம்.''

''என்னக்கா...! அந்த வில்லேஜ்ல பூமியை பிளந்துகிட்டு சக்தி சிலை எதாவது மேல வந்திருச்சாமா?''

''அதிகப் பிரசங்கி... சொல்றதைக் கேள். அந்த கிராமத்துல ஞானசுந்தரம் - பாக்யலட்சமின்னு ஒரு வயசான ஜோடிங்க... அவங்களுக்கு குழந்தை ஒண்ணும் பிறக்கப் போகுதாம்...''

''அப்ப வயசானவங்களுக்கு குழந்தை பொறக்கறதுதான் நியூஸோட ஹைலைட்டா?''

முந்திரிக் கொட்டை... விஷயம், இந்த வயசுல குழந்தையாங்கறது மட்டுமில்லை - அவங்களுக்கு 26 வயசுல ஒரு பெண் இருந்து கற்பழிக்கப்பட்டு இறந்தும் போனாளாம். அவ...''

''அடடே... இப்படி ஒரு ட்விஸ்ட்டா... அப்புறம்?''

''இது ட்விஸ்ட் இல்ல. உன்னோட ஆண்வர்க்கத்தோட கேவலமான டேஸ்ட்.''

''ஆமாமா... உங்க வயசுப் பொண்ணுங்கல்லாம் சென்னைல கண்ணகியோட தங்கச்சிங்களாத் தானே திரிஞ்சிகிட்டிருக்காங்க.''

''டேய்ய்...''

''சரி சரி விஷயத்தை சொல்லுங்க...''



''விஷயம் 'ரீ இன்கார்னேஷன்'கற மறுஜென்மம் சைட்ல போகுது. என்னன்னு போய் பார்த்து விபரமான தகவல்களோட வா. கவர் ஸ்டோரிக்கு தேறுமான்னு பார்ப்போம்.''

''ஆமா... இந்த கிராமத்து டுபாக்கூர் மேட்டரை உங்களுக்குத் தந்தது யாருங்கக்கா...?''

''திரும்பத் திரும்ப அக்காங்கறே... ஒழுங்கா அகிலான்னு கூப்பிடு - இல்லேன்னா மேடம்னு கூப்பிட்டுக்க. அதான் நல்லது.''

''மேடமா... அக்கா இது உங்களுக்கே ஓவரா தெரியலை?''

''டேய்... போடா... போய் என்னன்னு பார்த்துட்டு வாடா... போகும் போதே டுபாக்கூர், கப்ஸா, மூட நம்பிக்கைன்னு ஒரு பர்சப்ஷனோட போகாதே. ஓபன் மைண்டோட போ. உன் மாதிரி ரிப்போர்ட்டர்க்கு எப்பவும் ஓபன் மைண்ட்தான் ஸ்ட்ரென்த்!''

''சரிங்கக்கா''

ஜான்சன் அவளைக் கடைசிவரை கலாய்ப்பதை விடவேயில்லை. அவளும் ரசித்தபடியே செல்போனை ஜில் - போனாக்கினாள். தன் மார்புப்புறமாய் தள்ளி.

## 2

''எண்ணங்களுக்கென்று ஒரு தனி சக்தி இருப்பதை நான் உணர்ந்திருக்கிறேன். எண்ணங்களின் சக்தி பற்றி உலகம் முழுக்க பாஷைக்கு பாஷை எவ்வளவோ பேர் எவ்வளவோ புத்தகங்களைப் படைத்துள்ளனர். அவ்வளவையும் படித்த போதுகூட நான் பெரிதாய் அதை நம்பவில்லை. ஆனால் சிறுவயதில் நான் தீவிரமாய் ஆசைப்பட்ட விமானத்தில் பறப்பது,

ஒரு கனவுக் கன்னி நடிகையோடு கை குலுக்குவது, நயாகரா நீர் வீழ்ச்சியைக் கண்ணாரக் கண்டு களிப்பது, பத்மஸ்ரீ பட்டம் பெறவேண்டும் - என்று அதற்காகக் கனவு கண்டது என்று வரிசையாய் எனது அவ்வளவு சிறு வயது ஆசைகளும் ஒவ்வொன்றாய் ஈடேறவும் தான் செய்கிறது.

ஒரு விஞ்ஞானியான என்னால் இவைகளை சோதனைச் சாலையில் நிரூபிப்பது போல நிரூபிக்க முடியாது. ஆனால் தீவிரமான எண்ணங்களுக்கென்று ஒரு சக்தி இருக்கத்தான் செய்கிறது. சக்தியின் தீவிரத்தைப் பொறுத்து 60 வயதில் கூட ஒருவர் பிள்ளை பெற முடியும் என்பது என் நம்பிக்கை!'

- விஞ்ஞானி விவேக சுந்தரம்

**மா**ம்பாக்கம்!

பெயருக்கேற்ப நிறைய மாமரங்கள் கண்ணில் பட்டன... அவ்வளவிலும் பூக்கள் பூத்திருந்தன. போகும் வழியில் பன்றிகளும் நிறைய கண்ணில்பட்டன. மரத்தடிகளில் மரவள்ளிக் கிழங்கை தூக்குத் தராசில் நிறுத்து விற்றுக் கொண்டிருந்தார்கள். மலைப்பாம்பு புரண்டு நெளிவது போல மண்சாலை! வயலெல்லாம் அறுவடை முடிந்து காய்ந்து கிடக்க - அதில் வாத்துக் கூட்டம் ஒன்று மேய்ந்தபடி இருந்தது.

மேய்ப்பவன் ஒரு பீடி பிடித்தபடி - ஜென்மம் கண்டிருப்பதே பீடி பிடிக்கத்தான் என்பது போல காட்சி தந்தான்.

ஜான்சனின் ஹோண்டா பைக் அவனைப் பார்த்தபடியே கடந்து போய் ஒரு இடத்தில் நின்றது. ஜான்சன் கழுத்தை வளைத்து பூணூல் போல தன் கருப்பு லெதர் பேக்கை மாட்டிக் கொண்டிருந்தான். தலைக்கு பாலுமகேந்திரா கேப்!



திரும்பிப் பார்த்தான்.

வாத்துக்காரனும் தன்னைப் பார்ப்பதை வைத்து ஊன்றிப் பார்த்தான்.

''இங்க கொஞ்சம் வாப்பா...'' - ஜான்சன் அவனை அழைத்தான்.

''உனக்குத் தேவைன்னா நீதான் வரணும்...'' என்ற அவனிடம் ஒரு அலட்சியம். அது ஜான்சனுக்கு பிடித்துப் போனது. பைக்கை ஓரம் கட்டி நிறுத்தி விட்டு நெருங்கினான். அவன் எதிரில் ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தவன் அவனுக்கும் நீட்டினான். அவனும் சகஜமாகப் பேச ஆரம்பித்தான்.

''என்னாசார்... மெட்ராஸ்ல இருந்து வீர்றீங்களா?''

''மெட்ராஸ்ல இருந்தா... சென்னைப்பா... சென்னை!''

''சரி... ஏதோ ஒரு நெய்... நாங்கள்ளாம் மெட்ராஸ்னுதான் இப்பவும் சொல்லிக்கிட்டிருக்கோம். தோள்ல பை - தலைல தொப்பின்னு ஒரு மார்க்கமா நீங்க இருக்கறதைப் பார்த்தா நம்ம ஞானமய்யா ஊட்டுக்கு வந்திருக்கற மாதிரி தெரியுதே.''

''ஞானமைய்யாவா...?''

''ஞானசுந்தரமய்யாவைத்தான் நாங்க அப்படி சொல்வோம்.''

''யெஸ்... யெஸ்... ஆமா... எப்படி கண்டுபிடிச்சே நீ?''

''அது சரி... காலைல இருந்து உங்களோட சேர்த்து ஏழு பேர்! காரு, ஜீப்பு, பைக்குன்னு எல்லாத்துலையும் வந்துகிட்டிருக்கிங்களே... நான் இங்க தானே இருக்கேன். என்னைத் தாண்டி ஒரு ஈ காக்கா போயிட முடியுமா?''

''ஓ... அப்ப நிறைய பேர் வந்துட்டு போயிருக்காங்களா?''

''ஒரு டாக்டர் கூட வந்து பார்த்துட்டு போனாரு...''

''ஆமா... ஞானசுந்தரமய்யாவை உனக்கு நல்லா தெரியுமா?''

''தெரியுமாவா...? அவர் எங்க ஊர் மிராசு. ஊர்ல

பாதி இடம் அவரோட இடம் தான்...''

''அவர் மக கூட யாராலையோ கெடுத்து...''

''அது ஒரு பெரிய கொடுமைங்க... அதோ அங்க தெரியுது பாருங்க ஒரு இடிஞ்ச கோவில்...''

அவன் வெகு தூரத்தில் ஒரு கண்மாய்க்குள் இடிந்த கோபுரத்துடன் தெரிந்த கோவில் ஒன்றைக் காட்டினான். அதன் மேல் கூட ஏராளமான கழுகுகள். ஜான்சனும் அந்த கோவிலைப் பார்த்தான்.

''அந்த கோவிலுக்கு யாருமே போகமாட்டாங்க. அது சண்டபேரி அம்மன் கோவில். வருஷத்துக்கு ஒரு நாள் - அதுவும் ஆடி மாசம் பதினெட்டாம் நாள் ஆடிப்பெருக்கன்னிக்குதான் போவாங்க.''

''அதுக்கென்ன?''

''அந்த கோவிலுக்கு வெளியதான் ஞானமய்யா மக சங்கரி உடம்பு கிடந்துச்சு. கழுகுங்க கூட்டம் ஜாஸ்தியாகி ஒரே சப்தம். அப்பவே அங்க ஏதோ வில்லங்கம்னு தெரிஞ்சு - போய் பார்த்தப்ப உடம்பைக் கழுகுங்க முக்காலே மூணுவீசம் தின்னு முடிச்சிருந்திச்சு. ஐயா அப்படியே மயக்கமாகி விழுந்துட்டாரு... இப்ப நினைச்சாலும் எனக்கே நெஞ்சை அடைக்குது...''

''பேப்பர்ல நியூஸ் வந்த மாதிரியே தெரியலியே...''

''என்னத்தங்க... எப்பவும் கிராமங்கள்ல நடக்கற விஷயங்க அப்படியே அமுங்கிப் போகும். சங்கரி உடம்பை அங்க பார்த்தப்ப, அது தெரியாத்தனமா அங்க போய் அதுக்கு ஏதோஆயிடிச்சு. சண்டபேரி அம்மன்தான் காவு வாங்கிடிச்சின்னு நினைச்சோம். பிறகுதான் ஞானமய்யாவுக்கே தெரிஞ்சிச்சு - சங்கரியை யாரோ ஒரு நாலு பேர் அந்த இடத்துக்கு கூட்டிகிட்டு போய் கெடுத்த விஷயம்...!''

''பிறகு மட்டும் எப்படி தெரிய வந்துச்சு?''

''அது உடம்பு கிடந்த இடத்துல பீடி, சிகரெட், பிராந்தி பாட்டில்லாம் இருந்தது - அப்புறம்தான் தெரிய வந்துச்சு... ஆடு மேய்க்கற ஒரு பையனும், சங்கரியோட, பேண்ட் சட்டைபோட்ட நாலு பேர் அந்த பக்கம் போறத பாத்துருக்கான். சங்கரி கூட



படிச்ச பசங்கன்னு நினைச்சிருக்கான்.''

''சரி... இவ்வளவுக்கு பிறகும் போலீசுக்கு போகலையா?''

''போனாரு... போலீசுக்கே ஒரு எழவும் புரியலை. உடம்பைத் தான் கழுகுங்க கொத்தித் தின்னுடுச்சே... அந்த உடம்பை வெச்சு என்ன பண்றதுன்னு புரியலை.''

''ஆச்சரியமா இருக்கே...! சரி... இப்ப அந்த கோவில் பக்கம் எல்லாரும் போறாங்களா?''

''நீங்க வேற... இப்பதான் பயமே அதிகமாயிருக்கு. தப்பித் தவறி கூட யாரும் போறதில்லை. நாலுபக்கமும் போர்டு எழுதி வெச்சு முள்ளுவேலி போட்டு யாரும் உள்ள போக முடியாதபடி பண்ணியாச்சுன்னா பார்த்துக்குங்களேன்.''

''இப்ப நான் போய் அங்க போட்டோ எடுக்கணும்னா...?''

''போங்க... தாராளமா போங்க. ஆனா... முழுசா வீட்டுக்கு போய் சேர மாட்டீங்க.''

''அது எப்படி? ஒரு நாலு பேர் உங்க ஊர் மிராசு பொண்ணைத் தூக்கிட்டு போய் கெடுத்துட்டே போவாங்க. அவங்களுக்கு எதுவுமே ஆகாது. நான் போனா - இல்ல மத்தவங்க போனா மட்டும் எதாவது ஆயிடுமா?''

''அவங்களைப் போட்டுத்தள்ளத்தான் சங்கரி திரும்பப் பொறந்தே வரப்போறாளே...''

''அதாவது... ஞானசுந்தரம்கறவருக்கு குழந்தை பிறந்து, அது பெண்ணாயிருந்து, அப்புறமா அது வளர்ந்து இருபத்தாறு வருஷம் ஆன பிறகு கொன்னவங்களை தேடிப் பிடிச்சு பழிவாங்குமா...?''

''அப்படித்தானே அய்யா கனவுல அது வந்து சொல்லியிருக்கு?''

''ஆமா... இந்த இருபத்தாறு வருஷத்துக்குள்ள அந்த நாலு பேரும் இயற்கையாவே செத்துப் போயிருந்தா...?''

''அது... அது...''

''சரி... உயிரோட இருக்கறதாவே வெச்சுப்போம்.

இப்படி ஒருத்தி பொறந்து வரப்போறான்னு தெரிஞ்சு அவங்க முந்தி இட்டு சங்கரியை சின்னப் புள்ளைலயே திரும்ப கொன்னுட்டா...?''

''அட என்னங்க கொழப்பறீங்க...''

''நான் கொழப்பறேனா... யப்பா வாத்து...! நான் உன்னைக் கூப்பிட்டப்போ 'நீ என்கிட்ட வா'ன்னு சுயமரியாதையோட கூப்பிடத் தெரிஞ்ச உனக்கே நீ சொல்ற விஷயமெல்லாம் படுகேனத்தனமா இருக்கறது புரியலை?''

''அப்படின்னா எப்படி ஞானமய்யா சம்சாரம்... அதான் பாக்கியலட்சுமியம்மா கருத்தரிச்சாங்க? ஐம்பத்தஞ்சு வயசுல எப்படி கர்ப்பம் தரிக்க முடியும்?''

''வெளிநாட்டுல ஒரு ஆம்பளை கர்ப்பம், உண்டாகி புள்ளை பெத்துருக்கான். அது தெரியுமா உனக்கு?''

''நெசமாவா?''

''விஞ்ஞானம் போகற வேகத்துக்கு ஐம்பத்து அஞ்சு வயசென்ன - எம்பது வயசுல கூட பிள்ளை பெத்துக்க முடியும்னு ஒரு நாள் நிரூபிக்கப் போறாங்க பார்...''

''அப்ப நீங்க முடிவா என்ன சொல்றீங்க?''

''உன்கிட்ட சொல்ல என்ன இருக்கு... நான் அந்த ஞானசுந்தரம் கிட்டேயும், இந்த ஊர் போலீஸ் இன்ஸ்பெக்டர்கிட்டேயும் பேசறேன்.''

- ஜான்சன் அந்த வாத்துக்காரனிடம் இருந்து நழுவி திரும்ப தன் ஹோண்டாவில் ஏறிக் கொண்டான். ஹோண்டாவும் மாம்பாக்கத்தில் ஞானசுந்தரம் வீட்டை நோக்கி சீறத் தொடங்கியது!

**ஞா**னசுந்தரம் வீடு!

வீடு என்று கூறுவதைவிட- பங்களா என்று சொல்லலாம். வீட்டைச் சுற்றி ஏராளமாய் மாமரங்கள்; தென்னை மரங்கள். வீட்டு முகப்பில் பசுமாடு ஒன்று கட்டப்பட்டு கண்ணில்பட்டது. பெரிய பெரிய பஞ்சாரங்களுக்குள் நிறையவே கோழிகளும் தெரிந்தன.



சில வேலைக்காரர்களும் குறுக்கே நெடுக்கே நடமாடிக் கொண்டிருக்க 'டுர்ர்ர்' என்கிற பைக் சப்தமுடன் நுழைந்த ஜான்சனைப் பார்த்து விட்டு ஒருவன் ஓடி வந்தான். தடுத்தான்.

''யாருங்க நீங்க...? திறந்த வூட்ல நாய் நுழையற மாதிரி நுழையறீங்களே...?''

''எந்த நாயிப்பா ஹோண்டா பைக்ல வந்துருக்கு... நான் பத்திரிகைக்காரன் -'பாத்துப் பேசு.''

''போச்சுடா... அடுத்த ஆளா? ஐயா... உங்க திசைக்கே ஒரு கும்புடு. உங்களை எல்லாம் யாருய்யா கூப்பிட்டாங்க? 'காக்காய்க்கு மூக்குல வேர்த்த' கதையா எப்படிய்யா விஷயம் தெரிஞ்சு வர்றீங்க...?''

''ஆமா... அது என்ன 'காக்காய்க்கு மூக்குல வேர்த்த கதை...?' புதுசா இருக்கே - நான் கேள்விப்பட்டதில்லையே...''

''என்ன கிண்டலா... முதல்ல இடத்தைக் காலி பண்ணுங்க...''

''அட இருப்பா... நான் பெரியவரைப் பார்த்து நாலு வார்த்தை பேசிட்டு போறேன்...''

''அவரைப் பார்க்க முடியாது... தெரியாத்தனமா அவர் தன்னோட கனவைப் பத்தி தமிழ் வாத்தியார் தண்டபாணி கிட்ட பேசிட்டாரு... அது இப்படி உங்கள மாதிரி ஒரு கூட்டத்தையே இழுத்துகிட்டு வரும்னு அவர் எதிர் பார்க்கல...''

''அது யார் தண்டபாணி?''

''அந்த ஆளு ஒரு ஓட்டை வாயன், போங்க... போய் மேலத் தெருவுல இருக்கற அவர்கிட்டையே எதைக் கேக்கணுமோ அதைக் கேட்டுக்குங்க. இங்க ஐயா அம்மாவை யாரும் பார்க்க முடியாது...''

''இதோ பாருங்க... நான், நீங்க நினைக்கற பத்திரிகைக்காரன் கிடையாது. அவங்க சொல்றதத் தாண்டி ஒருவார்த்தை கூட எழுத மாட்டேன்.''

''ஐயா போதும்யா... போதும்... வளைச்சு வளைச்சு நீங்க காலைல இருந்து கேட்ட கேள்விங்களையும், ஐயா தடுமாறிப் போனதையும் நான் பாத்துகிட்டு தானே இருந்தேன். உங்களை எல்லாம் திருத்தவே முடியாது. உங்களுக்குத் தேவை

சுடச்சுட விசயம். அதுக்காக யார் எக்கேடு கெட்டாலும் கவலைப் பட மாட்டீங்க. 'ஒரு பாட்டி கர்ப்பமானாள்!'னு ஒருத்தர் தலைப்பு வைக்கறாரு. 'கற்பழிக்கப்பட்ட பெண் திரும்பப் பிறப்பாளா?'ன்னு கேள்வி கேட்டு முடிக்கிறாரு ஒருத்தர். 'எருது வருத்தம் காக்காய்க்கு கொண்டாட்டம்'கற கதையா உங்களுக்கெல்லாம் அடுத்தவங்க மனசைப் பத்தியோ வேற எதைப் பத்தியுமோ கவலையே கிடையாது. நீங்க புறப்படுங்க...''

- அந்த வேலைக்காரன் தோளில் கை போட்டே ஜான்சனைத் தள்ளிவிட்டான்.

ஜான்சனுக்கும், அந்த நேரத்தில் என்ன பேசினாலும் ஞானசுந்தரத்தைப் பார்க்க முடியாது என்பது புரிந்தது. பேசாமல் திரும்பத் தொடங்குமுன் திரும்பித் திரும்பிப்பார்த்தான். ஒரு திறந்திருந்த ஜன்னல் வழியாக ஒரு 55 வயதுப் பெண் கூர்மையாகப் பார்த்தபடி இருந்தாள். ஜான்சன் பார்க்கவும் பட்டென்று கதவைத் தாழிட்டாள்.

ஜான்சனுக்கு வலக்கன்னத்தில் யாரோ அறைந்ததுபோல் இருந்தது. சிறிது தூரம் சென்றவன் திரும்பி அந்த வேலைக்காரனைப் பார்த்து 'உங்களுக்கு நிறையவே பழமொழிங்க தெரிஞ்சிருக்கு... இந்த அஞ்சு நிமிஷத்துல மூணு பழமொழிய சொல்லிட்டீங்க. உங்களையே ஒரு நாள் தனியா பேட்டி எடுக்கணும்.' என்று கூறவும்.

''ஐயா... போதும்யா போதும் - நீங்களும் உங்க பேட்டியும்... இடத்தைக் காலி பண்ணுங்க - **'காலப்பிடிச்ச சனி கழுத்தையும் பிடிக்கப் பாத்துச்சாம்'**. அப்படி இருக்கு உங்க அளப்பு...'' என்றான் அவனும் வேகமாக.

''பாத்தீங்களா... இந்த பதில்ல கூட சனியனை வெச்சு ஒரு பழமொழிய சொல்லிட்டீங்க'' என்று சிரித்தபடி பைக்கை உதைத்தான்.

திரும்பவும் அது 'டுர்ர்ர்ர்....!'

**த**மிழ் வாத்தியார் தண்டபாணி தலைக்கு எண்ணெய் வைத்துக் கொண்டிருந்தார். கறுப்பாய்



அழுக்கோடு கரைந்து அதுவும் கழுத்து, முதுகு என்று ஒழுகிக் கொண்டிருந்தது. அப்படியே வாசற்புறம் உள்ள முருங்கை மரத்து ஆட்டுக்கு தழையை உருவிப் போட்டுக் கொண்டிருந்தார்.

'டுர்ர்ர்...!' சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்தார்.

ஜான்சன்!

''வணக்கம் சார்... இங்க தமிழ் வாத்தியார் தண்டபாணிங்கறது...?''

''நான் தான். யாரு... ஞானமய்யா வீட்டு வேலைக்காரன் வேலுதான் என்ன பாக்கச் சொல்லி அனுப்பி வெச்சானாக்கும்?''

''ஓ... அந்தப் பழமொழி பார்ட்டி பேர் வேலுவா?''

''சரியான வாய் கிழிஞ்ச பய அவன்! சரி சரி... வந்த விசயத்த சொல்லுங்க. நீங்க எந்த பத்திரிக்கை?''

''அமுதம் சார்...''

''பேர்லதான் உங்க பத்திரிக்கை அமுதம். உள்ள அவ்வளவு விஷயமும் விஷம்...''

''தேங்க்ஸ் சார். இதை நான் அப்படியே ஆசிரியர் கிட்ட சொல்லிட்றேன். ஏன்னா, இதையே நான் சொன்னா சம்பளம் ஒழுங்கா தரமாட்டாங்க...''

''என்னயத்தான் ஊர்ல 'வாய் கிளிஞ்சவன்'னு சொல்வாங்க. நீங்க எனக்கும் மேல போல...''

சிரித்தான் ஜான்சன். சாவதானமாக உட்கார்ந்து பேச எதாவது திண்ணை, திட்டு கிடைக்குமா என்றும் பார்த்தான்.

''என்ன... உக்காரணுமா?''

''ஆமாங்க... சென்னைல இருந்து ஐம்பது கிலோ மீட்டர் தூரம் மோட்டார் பைக்லயே வந்த களைப்பு...''

''மணிமேகலை... மணிமேகலை...'' - தமிழ் ஆசிரியர் குரல் கொடுக்க, வீட்டினுள் இருந்து ஸ்கூல் யூனிஃபார்மில் அவரது மகள் எட்டிப் பார்த்தாள்.

''ஒரு சேரைக் கொண்டுகிட்டு வந்து போடும்மா...'' என்றவர் ஜான்சன் பக்கமாய் திரும்பி ''அது என் மவ... பேர் மணிமேகலை. நான் கவர்மெண்ட் ஸ்கூல் டீச்சர். என் மகளும் பத்தாம்

வகுப்பு தான் படிக்கறா...''

அவர் சொல்லி முடிக்க - ஒரு தகரச் சேர் வந்து வாசலில் விரிய, ஜான்சனும் அமர்ந்தான்.

''சரி... இப்ப உங்களுக்கு என்ன தெரியணும்?''

''இல்ல... ஞானசுந்தரமய்யா மகளை யாரோ கற்பழிச்சு கொன்னுட்டாங்கன்னு...''

''ஆமாம்... யாருன்னு தெரியலை - அந்த புள்ளையை நைஸா பேசி சண்டபேரி கோவில் பக்கமா கூட்டிகிட்டுபோய் கெடுத்து கழுத்தை நெரிச்சும் கொன்னுட்டாங்க...''

''கொலைன்னு தெரிஞ்சு போலீஸ் வரலையா?''

''வந்துச்சு... கிராமத்து விஷயம்கறதால பேப்பர்ல வர்றத ஐயா விரும்பலை. இன்ஸ்பெக்டரும் அப்படியே லூசுல விட்டுட்டாரு...''

''அப்ப கொலைகாரங்களைப் பிடிக்கறதெல்லாம் கிடையாதா?''

''சங்கரி கொலை செய்யப்பட்டாங்கறதே அவ, ஐயா கனவுல வந்து சொன்ன பிறகுதானே தெரியும்! அதுக்கு முந்தி கோவில் பக்கமா போனவளை சண்டபேரி ஆத்தாதான் தண்டிச்சிட்டான்னு நினைச்சுகிட்டிருந்தோம்.''

''அப்ப, நாலு பேர் பேண்ட் சட்டை போட்டுகிட்டு வந்ததாவும், அவங்க சங்கரியை கோவில் பக்கம் கூட்டிகிட்டு போனதை ஆடு மேய்க்கற பையன் கூட பார்த்ததாகவும் காதுல விழுந்ததெல்லாம்...?''

''எல்லாமே சங்கரி கனவுல வந்து சொன்ன பிறகு கூட்டிக் கழிச்சு பார்த்தப்ப தெரியவந்த விசயங்க தான்.''

''கனவுல எப்ப வந்து சொன்னா...? என்னன்னு சொன்னா?''

''என்னத்த... 'அப்பா... என்னை நாலு நாயுங்க கெடுத்து கொன்னுட்டானுங்க... சாமி ஒண்ணும் என்னைக் கொல்லலை. நான் திரும்பப் பொறந்து வந்து என் கையாலயே அவங்களக் கொன்னாதான் என் ஆத்திரம் அடங்கும்'னு சங்கரி சொன்னாளாம். ஐயா முதல் முதலா என்கிட்டதான் சொன்னாரு...''



''அவங்க யாருன்னு சொல்லலையாமா?''

'' 'எனக்குத் தெரிஞ்ச நாலு பேர் தான்... நான் பேரைச் சொல்லி அவங்க தப்பிச்சுக்கறதை விரும்பலை'ன்னு சொன்னாளாம்.''

''ஐயா கனவுல போய் சொன்னதுக்கு - போலீஸ் இன்ஸ்பெக்டர் கனவுலயும் கமிஷனர், ஐ.ஜின்னு எல்லா ஆபீசர் கனவுலயும் போய் சொன்னா அவங்கள புடிச்சு போலீஸ்காரங்களே தண்டிச்சிட்டு போறாங்க. எதுக்கு இது பொறந்து வந்து வளர்ந்து எழுந்திரிச்சு அப்புறமா அவங்களத் தேடிப் போய்...''

''நீங்க கிண்டல் பண்றீங்களா... இல்ல சீரியஸா கேக்கறீங்களா?''

''ஐயோ இந்த விஷயத்தைப் போய் யாராவது கிண்டல் செய்வாங்களா... சீரியஸாதாங்க கேக்கறேன். நீங்களே யோசிச்சு பாருங்க. நான் கேக்கறதுல என்ன தப்பு இருக்கு...!''

''அதுவும் சரிதான்... ஆனா இந்த ஆவிங்க சமாச்சாரமெல்லாமே கொழப்பமானதுதாங்களே... நமக்கென்ன புரியப்போகுது.''

''அப்ப இவ்வளவுதான் விஷயங்களா?''

''இவ்வளவேதான்... ஐயா சொன்னதை நான் மனசு கேக்காம உள்ளூர்ல சொல்லப்போக - இப்ப நீங்க வந்து கேக்கற அளவு அது பெருசாயிடிச்சு. இதை நானே கொஞ்சம்கூட எதிர்பார்க்கலைங்க. ஐயாவுக்கும் இதனால என்மேல வருத்தம்...''

''சரிங்க... உங்கள ஒரு போட்டோ எடுத்துக்கட்டுமா?''

''ஐயோடா சாமி... நான் எண்ணெய் முழுக்கு போடப்போறேன். இந்த கோலத்துல என்ன படம் எடுத்தா தனியா திருஷ்டி படம் வரைய வேண்டாம். என் போட்டோவையே பிரிண்ட்டு போட்டு சந்தைல வெச்சு நீங்க வித்துடலாம்.''

- தண்டபாணி எகிறிக் குதிக்க, ஜான்சனும் சிரித்துக் கொண்டே அவரிடம், ''ஆமா... இங்க போலீஸ் ஸ்டேஷன் எங்க இருக்கு?'' என்று கேட்க, அவரும் கூற, அடுத்து அவனது ஹோண்டா ஸ்டேஷன் நோக்கி 'டுர்ர்ர்ர்....!'

## 3

'எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் சரி அது எந்த இனத்தில் இருக்கிறது என்பதைப் பாகுபடுத்திப் பார்க்கத் தெரிய வேண்டும். விஷயத்திற்கும் இனத்திற்கும் என்ன சம்பந்தம் என்று தோன்றலாம். நிறையவே உள்ளது. மனிதர்களில் ஆண், பெண் என்று அந்த இனம் இரு கூறாகப் பிரிந்து கிடப்பதைப் போலவே விஷயங்களிலும் பிரிவுகள் உண்டு. எந்தவித நிரூபணமும் இன்றி ஏற்க முடிந்த விஷயங்கள் எல்லாமே பெண் இனம். உதாரணமாக நெருப்பு சுடும், பனி என்றால் குளிரும் போன்ற விஷயங்கள். இதை ஒருவர் இருந்து நிரூபிக்கத் தேவை . இல்லை. அவரவர்க்கே பட்டறிவால் பளிச்சென்று புரிந்து விடும் ஒரு விஷயம் இது. இதுபோல நல்ல கல்வி கற்றால்தான் வாழ்வில் முன்னேற முடியும் என்கிற விஷயத்தை உடனேயே ஒருவர் ஏற்க முடியாது. அதை நம்பிக்கை வைத்துத்தான் ஏற்க வேண்டும். ஏனென்றால் இங்கே கல்வி கல்லாத பலரும்கூட வாழ்வில் முன்னேறியதை சிலர் உதாரணம் காட்ட முடியும். இப்படி நம்பிக்கை வைத்து ஏற்கும் விஷயங்கள் ஆண் இனம் ஆகும்.

ஏன் என்றால் நமது உறவு முறையில் இன்னாருக்கு மகனாக நான் பிறந்தேன் என்பதில் இந்த தாய் வயிற்றில் தான்



பிறந்தேன் என்பதற்கு ஊரே சாட்சியமளிக்க முடியும். ஆனால் இந்த அப்பாவுக்குத் தான் மகனாக (அ) மகளாக நான் பிறந்தேன் என்பதை அம்மா சொல்லி நம்பித்தானே ஏற்கிறோம். எனவே தான் பெண் இனம் என்பது நிதர்சனமாகவும், ஆண் இனம் என்பது நம்பிக்கையாகவும் உள்ளது.

கேமராவைத் திருகியபடியே தன் எதிரில் அமர்ந்த ஜான்சனை அந்த போலீஸ் ஸ்டேஷனின் இன்ஸ்பெக்டர் தனராஜ் என்பவர் சற்று வெறுப்புடன் பார்த்தார்.

பல போலீஸ்காரர்களுக்கு பத்திரிகையாளர் என்றாலே பிடிக்காது. காரணம் பெரிதாக ஒன்றுமில்லை. போலீஸ் என்கிற பயமே துளியும் இன்றி 'நாங்களும் சமுதாயக் காவலர்கள்தான்' என்கிற அந்த பாவனை தான்!

''சார் எந்த பத்திரிகை?'' - இன்ஸ்பெக்டர் ஆரம்பித்தார்.

''அமுதம்...''

''பேர்லதான் உங்க பத்திரிகை அமுதம்... போட்ற விஷயம் பூரா விஷம்...''

''ஆமாமா... 'காவல்காரன் உங்கள் நண்பர்'னு நீங்க சொல்லிகிட்டே சைக்கிள்ல டபுள்ஸ் போறவங்ககிட்டல்லாம் அஞ்சைக்கொடு, பத்தைக் கொடுன்னு சொல்றதில்லையா... அப்படித்தான்...''

''பத்திரிகைக்காரங்ககிட்ட நாங்க பேச முடியுமா... கேட்டா ஈபிகோ செக்ஷன்ல ஆரம்பிச்சு ஜனாதிபதி வரை போவோம்னு உதார் உடுவீங்க...''

''என்கிட்ட உதார்லாம் கிடையாது... நான் கட்டாயமா போயிடுவேன்.''

''சரிய்யா... வந்த விஷயத்தை சொல்லு...''

''அய்யாவா... என்னையும் என்ன இந்த மாம்பாக்கம் ராமசாமி முனுசாமின்னு நினைச்சிகிட்டீங்களா இன்ஸ்பெக்டர்? நான்

பத்திரிகைக்காரன்... பேர் ஜான்சன்!''

''சரிங்க ஜான்சன் சார்... வந்த விஷயத்தை சொல்லுங்க...''

''இந்த ஊர்ப் பெரியவர் ஞானசுந்தரம்கறவர் மகளை சிலர் கற்பழிச்சு கொன்னதா கேள்விப்பட்டேன். அந்த கேஸ் எந்த அளவுல இருக்கு...?''

''கேள்விப்பட்ட விஷயத்துக்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது. நிஜமா நடந்திருந்தா, பாதிக்கப்பட்டவங்க புகார் கொடுத்திருந்தா எஃப் ஐ ஆர் போட்டு நடவடிக்கை எடுக்க முடியும்...''

''அப்ப கேஸே ஃபைல் பண்ணலைன்னு சொல்லுங்க...''

''புகாரே ஒருவர் கொடுக்காதப்ப என்னத்த ஃபைல் பண்ண...? நான் தமிழ்லதானே சொல்லிகிட்டு இருக்கேன்.''

''அப்ப காதுல விழுந்ததெல்லாம்...?''

''உங்க காதுல ஆயிரம் விழும். அதுக்கெல்லாம் நான் என்னத்த சொல்றது...?''

''சரி... ஊர் பெரியவர் ஞானசுந்தரத்தோட அந்த பொண்ணு வேறஎப்படி செத்துப்போனா?''

''தனியா கோவிலுக்குப் போயிருக்கா... சண்டபேரி கோவிலுக்கு ஊரே போகப் பயப்படும் போது இவ போயிருக்கா... போன இடத்துல பாம்போ, தேளோ கடிச்சு இறந்துருக்கலாம்.''

''நீங்க சொல்றதுதான் பதில்னா பிரேத பரிசோதனை அறிக்கை அதை உறுதி செய்திருக்குமே...?''

''எங்க இருந்தது பிரேதம்? ஒரு அஞ்சாறு கிலோ சதையை பிரேதம்னு வார்த்தைக்கு வேணா சொல்லிக்கலாம். காக்கா, கழுகு கொத்திக் கொதறிட்டுல்ல போயிடிச்சு.''

''அந்த அஞ்சாறு கிலோ சதையை லேபுக்கு அனுப்பி டெஸ்ட் பண்ணீங்களா?''

''அதுக்கு பெரியவர் ஞானசுந்தரம் விருப்பப் படலை. 'இருக்குற சதையைக் கொண்டாவது நான் காரியம் பண்ணிக்கறேன். தயவு செய்து விட்டுடுங்க'ன்னு அழுதார்.''



''அவர் அழுதது இருக்கட்டும். சட்டம்னு ஒண்ணு இருக்குல்ல...?''

''கிராமப்புறங்கள்ல சட்டம் கொஞ்சம் வளைஞ்சு கொடுத்துத்தான் போகும். இது உங்களுக்குத் தெரியாதா என்ன?''

''சரி... இப்ப அந்த பெண்ணே திரும்ப வந்து பிறக்கப்போறதா வந்திருக்கற தகவல் பத்தி...''

''நானும் கேள்விதான் பட்டேன். ஆனா முழுசா நம்பத் தயாரா இல்லை.''

''ஏன்... அது சாத்யம் இல்லைங்கறதுதான் உங்க கருத்தா?''

''உம்... அப்படிக்கூட வெச்சுக்குங்களேன்.''

''மொத்தத்துல ஒரு கேள்விக்குக்கூட தெளிவா நீங்க பதில் சொல்லல. இதுக்கு என்ன சொல்றீங்க.''

''நான் ஒரு முட்டாளோ என்னவோ...?''

''அப்ப நான் பத்திரிகைல 'இன்ஸ்பெக்டர் தனராஜ் தன்னை ஒரு முட்டாள் என்று ஒப்புக் கொண்டார்'னு எழுதவா?''

''ஐயா சாமி... எனக்குப் பத்திரிகைக் காரங்கன்னாலே அலர்ஜிய்யா... நான் ஒரு அர்த்தத்துல சொல்லியிருப்பேன். அவங்களோ வேறு ஒரு அர்த்தம் எடுத்துக்குவாங்க... அந்த பயத்துலதான் உங்ககிட்டையும் பேசினேன். ஏற்கனவே இந்த விவகாரத்துல நான் மண்டை காய்ஞ்சு போய் உட்கார்ந்திருக்கேன். நீங்க வேற இஷ்டத்துக்கு எழுதி என் டிபார்ட்மெண்ட்ல எனக்கு ஒரு ஆப்பு செய்யும்படி பண்ணிடாதீங்க சாமி...''

இன்ஸ்பெக்டர் தனராஜ் முதல் தடவையாக சற்று இயல்பாகப் பேசினார். ஜான்சனும் சிரித்தான். பிறகு 'ப்ச்ச்...!' என்றான் சற்று வருத்தமாக.

''என்ன சார்... எதுக்கு இந்த 'ப்ச்ச்ச்...' ''

''அம்பத்தஞ்சு கிலோ மீட்டர் மெனக்கெட்டு வந்திருக்கற எனக்கு உருப்படியா ஒரு விஷயம்கூட கிடைக்கல பாருங்க. அதை நினைச்சேன்.''

''உங்களுக்கு சுடச்சுட விஷயம் வேணும்கறதுக்காக நாட்டுல பரபரப்பா தப்பு நடக்கணுமா சார்...?''

''என்ன சார்... ரொம்ப புத்திசாலித்தனமா

பேசிட்டதா நினைப்பா?''

''சத்யமா அப்படி இல்ல... யதார்த்தமாதான் கேட்டேன்.''

- அதற்கு மேல் ஜான்சனும் வாயைக் கொடுக்காமல் புறப்பட்டு விட்டான்.

# 4

பெண் இனம் நிதர்சனம், ஆண் இனம் நம்பிக்கை என்று பார்த்தோம். எல்லா விஷயங்களுமே இப்படித்தான் - இரண்டு இரண்டாகப் பிரிந்துதான் அது இருக்கிறது. மரம் ஓங்கி வளர்ந்த நிலையில் தெரிகிறது. ஆனால் அதன் வேர்கள் வெளியே தெரிவதில்லை. மரம் நன்றாக இருப்பதைப் பார்த்தும், வேர்கள் உள்ளடங்கி இருப்பதை உணர்ந்து நம்பிக்கை வைத்தும்தான் ஏற்கிறோம்.

இவ்வளவு பெரிய பீடிகைக்கு காரணம் இருக்கிறது. இந்த உலகில் உண்டென்றும் இல்லை என்றும் விவாதிக்கப்படும் விஷயங்கள்கூட இதே ரகம்தான். நம்பி ஏற்க வேண்டியவை - நம்பாமல் நிதர்சன மாய் ஏற்க முடிந்தவை என்று இருகூறு களாக அவை பிரிந்து கிடக்கின்றன!

இதில் நம்பி ஏற்க வேண்டிய பின்னணியில் இருப்பவைதான் கடவுள் இருக்கிறாரா, இல்லையா? மறுஜென்மம் இருக்கிறதா, இல்லையா? பேய், பிசாசுகள் இருக்கிறதா, இல்லையா? போன்ற கேள்விகள்!



மாம்பாக்கத்தில் தான் கேள்விப்பட்ட அவ்வளவையும் சொல்லி முடித்த நிலையில்...

''யக்கா... மாம்பாக்கம் மேட்டர்ல பெருசா ஒண்ணுமில்ல. நீங்க சொன்ன மாதிரி ஐம்பத்தஞ்சு வயசு லேடி கர்ப்பம் தரிச்சிருக்காங்க. அதை வேணும்னா நீங்க எக்ஸ்போஸ் பண்ணுங்க. அது ஒரு குட்டி ஆச்சரியமான விஷயம்தான். ஆனா இந்தக் காலத்துலதான் ஆம்பளையே பிள்ளை பெத்துக்கறானே... அதனால இதை யாரும் ஒரு பெரிய விஷயமா நினைக்க மாட்டாங்க.

மத்தபடி 'நானே திரும்ப வந்து பொறக்கப் போறேன்'னு அவங்களோட செத்துப்போன சாரி சாரி... கொலை செய்யப்பட்ட (அ) சண்டபேரி அம்மனால் தண்டிக்கப்பட்ட சங்கரி சொன்னதா நம்ம காதுக்கு வந்த தகவல் ஒரு கப்ஸா. யாரோ கிளப்பிவிட்ட புரளி. புரளியை நம்பி ஒரு கவர் ஸ்டோரி பண்றது புத்திசாலித்தனமும் இல்லை.''

''அப்ப தூக்கிப் போட்டுட்டு நம்ம வேலையைப் பாப்போம்கறியா?''

''எக்ஸாக்ட்லி... வாணியம்பாடில விஜய்காந்த் மீட்டிங் இருக்கு. அதுக்கு போனா சூடா மேட்டர் எதாவது கிடைக்கும். 'குசேலன்' படம் அவுட்டு. ரஜினி என்ன நினைக்கறார்னு நோண்டிப் பாக்கலாம். இதனால 'ரோபோ' பட வியாபாரம் பாதிக்குமா பாதிக்காதான்னு சங்கர்கிட்ட கேட்டுப் பாக்கலாம்.''

''ஆமா... அவரும் நீ எப்ப வருவே - உன்கிட்ட பேசணும்னுதான் துடிச்சிகிட்டிருக்காரு பாரு...''

''ஆக்கபூர்வமா ஒரு யோசனை சொன்னா கேக்க மாட்டீங்களே... உங்களுக்கு உங்க மெயில் பாக்சும் அதுல வர்ற விஷயங்களும் தான் எப்பவுமே பெருசு.''

- ஜான்சன் அலுத்துக் கொண்டே சீட்டை விட்டு எழுந்தான். அகிலாவும் அவனை அதன்பின் இருக்கச் சொல்லவில்லை!

மூன்று மாதங்கள் சென்றுவிட்ட நிலையில் மெயில் பாக்ஸில் திரும்பவும் அந்த மாம்பாக்க மேட்டர்.

'அகிலா...

மாம்பாக்கம் ஞானசுந்தரம் பாக்யலட்சுமி தம்பதிகளுக்கு வரும் 9.9.2008 அன்று மகள் பிறக்கப் போகிறாள். அதுவும் நள்ளிரவு 12 மணிக்கு! இந்த 9ம் தேதிக்கு பின்னால் ஒரு ஆச்சரியமும் உள்ளது. கொலை செய்யப்பட்ட சங்கரி இதே 9ஆம் தேதி தான் பிறந்தாள். அதுவும் 9வது மாதத்தில்! திரும்பவும் அதே தேதி... அதே மாதம்... பிறக்கப் போகும் நேரம்கூட அப்படியேதான் நிகழப் போகிறது. இதற்குப் பிறகாவது சங்கரிதான் திரும்ப வந்து பிறந்திருக்கிறாள் என்பதை இந்த ஊரும் உலகமும் புரிந்து கொண்டால் போதும். சங்கரி பிறக்கட்டும். அதற்குப் பிறகு பல திருப்பங்கள் ஏற்பட இருக்கின்றன. அவை இந்த உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தும். குறிப்பாக தப்பு செய்து விட்டு தப்பித்து வாழ்ந்துவிட முடியும் என்று நினைக்கின்றவர்கள் எல்லாம் தடுமாறப் போகின்றனர்.'

இப்படிக்கு,
மெயில் மெய்யன்.

செய்தியைப் படித்த அகிலாவுக்கு நெற்றி சுருங்கியது.

'யார் இந்த மெயில் மெய்யன்...? மெயிலில் இப்போதெல்லாம் இப்படி நிறையவே அனாமதேயக் கடிதங்கள் வர ஆரம்பித்து விட்டன. நல்ல நல்ல மனிதர்களை எல்லாம் நாறடிக்க வேண்டுமா? இருக்கிறது இன்டர்நெட்டும் அதன் ஈ மெயிலும்... இந்த மெயில் மெய்யனை பிடிப்பதும் கடினம்... எங்காவது ஒரு நெட் சென்டரில் இருந்து பப்ளிக் பூத்தில் பேசிவிட்டுப் போவது போல மெயில் அனுப்பியவனாக இருப்பான்.'

திரையை அணைத்துவிட்டுத் திரும்பினாள்.

எதிரில் சுவரில் கேலண்டர். அதில் தேதியைப்



பார்த்தாள். 9.9'க்கு நடுவில் இன்னும் சில நாட்களே இருக்கும் நிலை!

இந்த விஷயத்தை தான் தொடர மறுத்தும் யாரோ விடாமல் தொடரச் சொல்வது எதனால் என்றும் ஒரு கேள்வி அவளுக்குள் எழும்பியது.

அந்த மெயிலைத் திரும்பத் திறந்து அதை அப்படியே ஜான்சனின் மெயில் பாக்ஸுக்கு திருப்பி அனுப்பி விட்டாள்.

அடுத்த அரை மணி நேரத்தில் ஜான்சனிடம் இருந்து போன்.

''யக்கோவ்...''

''சொல்லுடா தம்பி...''

''டா' வா?''

''நான் அக்கான்னா நீ டா'தான்டா...''

''ரைட்... ரைட்... இப்ப எதுக்கு இந்த சண்டை? நான் விஷயத்துக்கு வந்துட்றேன். திரும்ப மாம்பாக்கம் மேட்டர்.''

''என்ன... மெயில் எதாவது வந்ததா?''

''வந்ததாவா... 'விடாது கருப்பு' போல அந்த மேட்டர் விடாதுபோல இருக்கு...''

''முண்டம். அது நான் ரீ - டைரக்ட் பண்ண மெயில். ஒழுங்கா பார்...''

''அப்ப மேட்டர் என்னன்னு தெரியுமா உங்களுக்கு?''

''தெரியும்... நீ என்ன சொல்றே?''

''என்னத்த சொல்ல... கரெக்டா 9ம் தேதி 9ம் மாசம் ராத்திரி 12 மணிக்கு அந்தம்மாக்கு பெண் குழந்தை பிறக்குதான்னு பார்ப்போம்...''

''அப்படி பிறந்துட்டா மெயில் மேட்டர் உண்மையாயிடுமா?''

''என்னக்கா நீங்க... 'மழை பெய்யறதும், மகவு பொறக்கறதும் மகேசனுக்கே தெரியாது'ம்பாங்க. அப்படி இருக்கைல அந்த தேதி அந்த நேரத்துல பிள்ளை பெறந்தா அது நிச்சயம் ஒரு அதிசயமான - நம்ம கைல இல்லாத விஷயம்தானே?''

''அதெல்லாம் அந்தக் காலத்துல... இப்பல்லாம் சிசேரியன்ல எப்ப வேணா குழந்தை பெத்துக்கலாம். நேரத்தை நாம முடிவு செய்யலாம்.''

''ஓ... அப்படி ஒரு மேட்டர் இருக்கா.... சரிக்கா...

உங்க வரைல இது ஒரு டுபாக்கூர் மேட்டர்னு சொல்லாம சொல்றீங்க... அப்படித்தானே?"

"அப்படின்னு நீ சொல்றே... நான் சொல்லல..."

"அப்ப உங்க கருத்துதான் என்ன?"

"திரும்ப மாம்பாக்கத்துக்கு போ... 9ம் தேதி ராத்திரி 12 மணிக்கு இயற்கைப் பிரசவமா இல்லை சிசேரியனான்னு மட்டும் கவனி."

"கவனிச்சு...?"

"இயற்கையான பிரசவம்னா நானே அங்க புறப்பட்டு வருவேன். அப்புறமா நமக்கு அங்க நிறைய வேலை இருக்கு ஜான்சன்..."

"செயற்கை... சிசேரியன்னா நான் மூட்டையைக் கட்டிக்கிட்டு கிளம்பி வந்துடணும்... அவ்வளவுதானே?"

"அவ்வளவேதான்!"

- ஜான்சனுக்கு திரும்பவும் மாம்பாக்கம் போக வேண்டும் என்று நினைக்கும் போதே அந்த ஊரின் வழித்தடங்களும் அதில் திரிந்த பன்றிகளும்தான் நினைவுக்கு வந்தது.

"சரியான பன்னிப்பாக்கம் அது... மாம்பாக்கம்னு அழகா ஏமாத்தி வெச்சுட்டாங்க..." என்று முணுமுணுத்துக் கொண்டான்.

அப்போது அவனது செல்போனில் சிணுங்கல். இந்த முறை அகிலாவே அழைத்திருந்தாள்.

"என்னக்கா?"

"மாம்பாக்கம் போகும் போது அந்த சண்டபேரி அம்மன் கோவிலுக்கும் போய் பார்த்து வீடியோ கேமராவுல படம் பிடிச்சுகிட்டு வந்துடு..."

"ஐயோ அக்கா..."

"எதுக்கு கத்தறே...?"

"நான் உயிரோட இருக்கறது உங்களுக்குப் பிடிக்கலையா?"

"அடச்சீ... போன வை... ஒரு நல்ல ரிப்போர்ட்டரா லட்சணமா துணிச்சலா செயல்படுவியா - அத்த விட்டுட்டு..." - டொடக்!

- ஜான்சனுக்கு கொஞ்சம் கிள்ளப்பட்ட மாதிரி ஆகி விட்டது.

"பேசாம போலீஸ் டிபார்ட்மெண்ட்ல சி.ஐ.டி. வேலைக்கு போயிருக்கலாம். ப்ரமோஷனாவது கிடைக்கும்..." - என்று பெருமூச்சு விட்டான்!



9-ம் தேதி...

மதியப் பொழுது!

தனது பைக்கில் மாம்பாக்கம் சாலைக்குள் பிரவேசித்திருந்த ஜான்சனை முன்பு சந்தித்த அதே இடத்தில் வாத்துக் கூட்டத்தோடு சந்தித்தான் முனுசாமி என்கிற அந்த வாத்து மேய்ப்பவன்.

"அட என்னா சார் இது... திரும்ப வந்திருக்கீங்க..."

"ஏன்யா... வரக்கூடாதா?"

"இல்ல... போன தடவை வந்துட்டுப் போனதுக்கே ஒண்ணும் காணோமாம். இதுல நீங்க திரும்ப வந்து என்ன பண்ணப் போறீங்கன்னு பார்த்தேன்..."

"நான் இப்ப வந்திருக்கறது எதுக்குன்னே தெரியாம நீ இப்படிப் பேசினா எப்படி முனுசாமி...?"

"எதுக்கு சார்?"

"நான் அந்த சண்டபேரி கோவிலை கொஞ்சம் வீடியோ படம் எடுத்துக்க விரும்பறேன்... அதுக்குத்தான். நீ கொஞ்சம் என்கூட வர்றியா?

- அடுத்த நொடி முனுசாமி அங்கே இல்லை 'ஆள விடுங்க சாமி...' என்று ஓட ஆரம்பித்து விட்டான். ஜான்சனின் தோளில் வீடியோ கேமராவும் பேட்டரியும் கனத்தபடி தொங்கிக் கொண்டிருந்தது.

பக்கத்தில் அந்த ஏரிக்கரை மேடு ஒரு அரை பனைமர உயரத்திற்குத் தெரிந்தது. அதில் ஏறிப் பார்த்தான். அந்த கோவில் வெகு தொலைவில் லேசாகத் தெரிந்தது!

## 5

"நம்பி ஏற்க வேண்டிய விஷயங்களை நம்பாமல், ஏற்றுக் கொள்ள முடிந்த விஷயங்களைப் போல நினைத்து அதே பரிமாணத்தோடு அணுகுவதில்தான் எல்லா தவறுகளும் ஏற்படுகிறது. இதற்கு ஒரு

அளவுகோல், அதற்கு வேறு அளவு கோல்! இது முதலில் புரிய வேண்டும். அரிசி பருப்பை எடை போட்டு வாங்குவது போல துணிகளை நாம் வாங்குவதில்லை. துணியை எடை போட்டு வாங்கினால் நாம் ஏமாறுவதற்கு வாய்ப்பு உண்டு. எனவேதான் அதற்கு மீட்டர் அளவு கோல் கண்டறியப் பட்டது.

எனவே ஒரு விஷயம் எப்படிப்பட்டது என்று பார்த்து அதற்கேற்ப அணுகுவதில் தான் உண்மைத் தெளிவு ஏற்படும்!''

ஏரியில் சுத்தமாய் தண்ணீரே இல்லை. களிமண் தரைப்பரப்பு பாளம் பாளமாகப் பிளந்து கொண்டு கிடந்தது. அந்த வறட்சிக்கு நடுவில் வேலிக்காத்தான் செடிகள் மட்டும் ஏராளமாகத் தழைத்து வளர்ந்திருந்தன. மனிதர்களில் மோசமானவர்கள் மாதிரி பயிர்களில் மோசமானது இந்த வேலிக்காத்தான். பூமிக்கடியில் எவ்வளவு ஆழத்தில் தண்ணீர் இருந்தாலும் இதன் வேர்கள் அதை உறிஞ்சிக் கொண்டு விடும்.

விறகுக்குத் தவிர எதற்கும் இது பயன்படாது. விறகுக்குக் கூட வெட்டி எடுத்து வருவதற்குள் இதன் முட்கள் குத்தி காயம் படுவதுதான் மிச்சம்.

எய்ட்ஸை ஒழிக்கவும், கொசுவை ஒழிக்கவும் ஒரு இயக்கம் நடத்துபவர்கள் இதற்காகவும் ஒரு இயக்கம் நடத்தலாம் என்று தோன்றியது ஜான்சனுக்கு.

பார்த்துப் பார்த்து நடக்க வேண்டியிருந்தது அவனுக்கு.

அங்கங்கே சிகரெட் பாக்கெட்டுகளும், பிராந்தி பாட்டில்களும் கண்ணில் பட்டன. மக்கள் நடமாடவே அஞ்சும் ஒரு இடத்தில் அவைகள் எப்படி வந்திருக்க முடியும் என்கிற கேள்வியுடனேயே நடந்தான் ஜான்சன். இடையில் அவைகளையும் ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டான். கிட்டே நெருங்க நெருங்க சற்று பயம் மூளவே செய்தது.



விசுக்கென்று ஓடிய ஒரு சிறு நரி அவனுக்குள் ஆச்சரிய அதிர்வை மூட்டியது. பல இடங்களில் பாம்புச் சட்டைகள் கிடந்தன.

அது ஒரு சகஜமான இடம் இல்லை என்பது நடக்க நடக்கப் புரிந்தது. ஒரு கட்டத்தில் அந்த வேலிக்காத்தான் செடிகள் அவனை முற்றாக மறைத்தும் விட்டன.

அதனால் தானோ என்னவோ ஏரிக்கரை மேட்டின் மேல் சிலரோடு வந்து நின்று கொண்டு பார்த்த மாம்பாக்கம் முனுசாமிக்கு ஜான்சன் உள்ளே போனதே தெரியவில்லை. அவனோடு நின்ற ஊர்க்காரர்கள் முனுசாமியைத் தான் முறைத்துப் பார்த்தனர்.

''எலேய்... என்னை நம்புங்கப்பா! உள்ள ஒருத்தன் போயிருக்கான். பத்திரிகைக்காரன் தாம்ப்பா அவன். அவுகளுக்குதான் நம்ம கிராமத்து நம்பிக்கைங்கல்லாம் கேனப்பய விசயம் மாதிரி தோணும். ஏன்னா அவுக படிச்ச மேதைங்க பாரு...''

''போடா கோட்டிப் பயலே... ஏண்டா அவனைப் போக விட்டே. இன்னொரு பொணம் உழுவறதுக்கா?''

''எலேய்... அவன் நான் சொன்னால்லாம் கேட்கறவன் இல்லப்பு... அத முதல்ல விளங்கிக்க...''

அவர்களுக்குள் வாய்ச் சண்டை ஏற்படத் தொடங்கி விட்டது. அப்போது தமிழ்வாத்தியார் தண்டபாணி வேறு வந்து சேர்ந்தார்.

கொத்தாக நின்றபடி சண்டபேரி அம்மன் கோவிலைப் பார்த்து அவர்கள் பேசுவது வயிற்றில் புளியைக் கரைத்தது.

''டேய் என்னடா பண்றீங்க?''

''யாரு வாத்யாரா... வாங்க வாங்க...''

''நான் வர்றது இருக்கட்டும்... எதுக்குடா கோவில் பக்கமா பாத்துகிட்டு நிக்கறீங்க?''

''உள்ள ஒரு பத்திரிகைக்காரன் போயிருக்கான். உயிரோட வருவானோ இல்ல பொணம் தானோ?''

''அடக்கொடுமையே...''

''கொடுமையேதான். சங்கரி போனதுல இருந்தே தான் இந்தக் கிராமத்தை எல்லா கொடுமைங்களும்

குத்தகைக்கு எடுத்துக்கிச்சே...''

''அதுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்?''

''அது சரி... கேக்க மாட்டீங்க நீங்க? அந்த பொண்ணு திரும்ப பொறக்கப் போறதா ஒரு தகவல் வந்தாலும் வந்துச்சு... ஊருக்குள்ள நிம்மதியே போச்சு...''

அவர்கள் பாட்டும் பேசிக் கொள்ள, அங்கே ஜான்சனிடம் நல்ல முன்னேற்றம். கிட்டத்தட்ட கோவில் வாசலில் இருந்தான். வீடியோ கேமராவில் அவனாக கமெண்ட்ரி கொடுத்தபடி ஷூட் செய்து கொண்டிருந்தான்.

பாழடைந்த பத்தாம் நூற்றாண்டுக் கோவில்! கோபுரத்தில் ஒரு பொம்மைக்கு கூட முழுமை இல்லை. அதன் இண்டு இடுக்குகளில் ஏராளமான கழுகுகள்! அவைகள் ஜான்சனை பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தன. ஒரு வேளை அவைகள் பறந்து வந்து தாக்க முயன்றால் தப்பித்து ஓட வழி இருக்கிறதா என்று பார்த்தான்.

கோவிலுக்கு அந்த பக்கத்தில் ஏரியில் நிறையவே தண்ணீர் இருந்து ஒரு மறைவான புதர் போன்ற இடத்தில் பரிசல் ஒன்று கரை மேல் கவிழ்த்துப் போடப்பட்டிருந்தது. அதையும் ஷூட் செய்து கொண்டான்.

கோவிலைச் சுற்றி லேசாக ரத்தவாடை அடித்தது. வெட்டிப் போடப்பட்ட கோழிகளின் தலைகள் பல இடங்களில் கண்ணில் பட்டன. அவைகளைக் கட்டெறும்புகள் மொய்த்துக் கொண்டிருந்தன. உதிர்ந்த கோழிச் சிறகுகளும் ஏராளமாய் கண்ணில் பட்டன.

கோவிலுக்குள் சன்னதிக் கதவு திறந்தே கிடந்தது. உள்ளே ஒரே இருட்டு! ஒரு தீப்பந்தத்தைக் கொளுத்திக் கொண்டு போய் பார்த்தால் உள்ளே இருப்பது தெரியும் என்று தோன்றவே ஜான்சன் அதற்குத் தயாராகத் தொடங்கினான். குனிந்து பேண்ட்டை நன்றாக மேலுக்கு ஏற்றி மடக்கி விட்டுக் கொண்டான். அப்போது தனது கேமரா மற்றும் பையை அருகில் வைத்தான்.

நிறைய மஞ்சள் துணிகள் கிடைத்தன. துண்டுதுண்



டாய் கிடந்தவைகளை எடுத்து ஒரு முள் கிளையை ஒடித்து அதில் சுருட்டிக் கட்டினான்.

'தம்' அடிக்கும் பழக்கம் காரணமாக பாக்கெட்டில் தீப்பெட்டி இருந்தது. எடுத்து அந்த துணிகளுக்கு தீ வைத்தான். திகுதிகு வென்று எரிந்தது. எண்ணெய் இல்லாததால் அது சீக்கிரம் எரிந்து முடிந்து விடும் ஆபத்தும் இருந்தது. எனவே அத்துடன் வேகமாக ஓடினான்.

சண்டபேரி அம்மன் சன்னதிக் கதவு முன்னால் நின்று கொண்டு உள்ளே தீப்பந்தத்தைக் காட்டிப் பார்த்தான். சடசடவென்று ஒரு பத்துப் பதினைந்து வௌவால்கள் உள்ளிருந்து வெளிப்பறந்து வந்தன... அதில் ஒன்று அவன் முகத்தில் அறைந்து விட்டு அவனையும் அலறவிட்டது.

தீப்பந்தம் உள்ளே விழுந்து விட்டது... இருந்தும் அது எரிந்ததில் உள்ளிருக்கும் சண்டபேரி தெரிந்தாள்.

ஆறடி உயர சிலை... தலைப்பாகத்தில் தீ நாக்குகள், முட்டை விழிகள், நீண்டு வெளித் தொங்கும் நாக்கு, இருபுறமும் கோரைப் பற்கள், காலில் ஒரு எருமையை மிதித்துக் கொண்டு பன்னிரெண்டு கரங்களோடு - ஒவ்வொன்றிலும் ஒரு ஆயுதத்தோடு கிட்டத் தட்ட ஒரு காளி மாதா சிலை போலவே காட்சியளித்தாள்.

காலடியில் எருமைச்சிலை மேல் நிஜமாலுமே ஒரு நல்ல பாம்பு சுருண்டு படுத்திருந்தது. தீப்பந்தம் திகுதிகுக்கவும் அது நிமிர்ந்து படம் விரித்துப் பார்த்தது. ஜான்சனுக்குள் அந்தக் காட்சி விக்கித்துப் போக வைத்துவிட்டது. வௌவால்கள் வந்ததும் கீழே விழுந்ததும் கூட நல்லதுக்கு என்று தான் நினைத்தான்.

'எனக்கென்ன' என்று போயிருந்தால் அந்த பாம்பு போட்டுத்தள்ளி உள்ளே சுருண்டு விழுந்திருக்க வேண்டியது தான். வெளியே கிடந்தாலாவது கழுகுகள் கொத்தித் தின்னுவதை வைத்து ஊரில் இருப்பவர்கள் பார்த்துவிட்டு வர வாய்ப்பு உண்டு.

உள்ளே கிடந்தால் ஆடி 18ம் நாள் ஊரே திரண்டு வரும் போது எலும்புக் கூடாகத்தான் அவர்கள் பார்ப்பார்கள்.

ஜான்சன் யோசித்தபடியே எழுந்தான். திரும்ப விடியோ கேமராவைஎடுத்து வந்து அங்கே நின்று கொண்டு ஷூட் செய்யத் தொடங்கினான்.

நடுவில் மார்புப் பக்கம் இருந்து **தேவன் யேசுவின் வேதம்...** எனும் ஹலோ ட்யூன் பாடல் ஒலித்தது. செல்போன் அழைப்பு.

வேகமாக எடுத்து திரையைப் பார்த்தான்.

அகிலா!

''சொல்லுங்க மேடம்...''

''அக்கா போய் இப்ப நான் உனக்கு மேடமாயிட்டேனா?''

''சாரி மேடம்! நான் இப்ப ரொம்ப டென்ஷனான சூழ்நிலைல அந்த கோவில்ல இருக்கேன். சொல்ல முடியாத அளவு நிசப்தம். திரும்பின பக்க மெல்லாம் பாம்பு... தேள்... தலைக்கு மேல் கழுகுகள் - அங்கங்க ரத்தம் உறைஞ்சு ஒரே வாடை. ஒரு மோசமான பலி பீடத்துகிட்ட நிக்கற ஒரு உணர்ச்சி. எல்லாத்துக்கும் மேலா திறந்து கிடக்கற சன்னதிக்குள்ற சாமியைப் பாக்கவே பயமா இருக்கு... அவ்வளவு கோரம்!''

''ஜான்சன்...! நீ சீரியஸா தானே சொல்றே?''

''அட நீங்க ஒண்ணு... இங்க நிச்சயம் தப்பா ஏதோ இருக்கு. தப்பும் நடந்திருக்கு.''

''எதுக்கு தனியா போனே... ஊர்ல யாரையாவது கூட்டிகிட்டு போகலாம் தானே?''

''நீங்க வேற மேடம்! கோவில் பேரைக் கேட்டாலே ஓடிப் போறாங்க...''

''சரி சரி பீ கேர்ஃபுல்... நீ என்னை வந்து பாக்கறவரை பக்குபக்குன்னுதான் இருக்கும் எனக்கு.''

''எனக்கு அதுக்குமேல இருக்கு இப்ப...''

- அவன் விளக்கமளித்த நொடி கோபுரத்துக்கு மேல் கழுகுக் கூட்டத்திடம்ஒரு சலசலப்பு... படபட வென்று சிறகுகளை அசைத்துக் கொண்டு க்வீய்ச்ச்... க்வீய்ச்ச்... என்று அவைகள் கத்துவதும் '**அவன் இங்க இருந்தா ஒரே போடா போட்டுத் தள்ளிடணும். அவன் மட்டும் உயிரோட போனான்... இந்த கோவிலைப் பத்தின பயமும் போயிடும். நாம சாதகம் பண்ணவும் ஒரு இடம் கிடைக்காம போயிடும்...**' என்கிற குரலும் கேட்டது.



அவ்வளவுதான்!

ஜான்சனுக்கு உச்சி முதல் பாதம் வரை சிலிர்த்தும் ஜில்லிட்டும் போனது. ஓடிப்போய் கேமராவை எடுத்து மாட்டிக் கொண்டான். ஒரு வினாடி கூட யோசிக்காமல் சண்டபேரி அம்மன் சன்னதிக்குள்ளேயே நுழைந்து அம்மனுக்குப் பின்னால் போய் மறைவாக நின்று கொண்டான். காலடியில் அந்த நாகம்... போட்டால் போய்ச் சேர வேண்டியது தான். சண்டபேரியின் பன்னிருகரங்களுக்கு நடுவில் உள்ள இடைவெளி வழியாக வாயில் கதவுக்கு அந்தப்புறம் வெளியில் உள்ள பகுதி நன்றாகத் தெரிந்தது.

அந்த பாகத்தில் இப்போது நான்கு பேர் வந்து நின்றிருந்தனர். விநோதமான கறுப்பு உடை... சாய்பாபா போல கழுத்தில் ஆரம்பித்து காலடியில் முடிந்திருந்தது. நெற்றியில் கசாமுசாவென்று கறுப்பு சிவப்பு மஞ்சள் என்றுவண்ணத்திற்கு ஒரு பொட்டு. ஏராளமான சடை முடி.

''எங்கப்பா யாரையும் காணோம்...?''

''இப்பதான் நுழைஞ்சதா ஊருக்குள்ள இருந்து தகவல் வந்ததே?''

''ஒரு வேளை நாம வந்தது தெரிஞ்சு ஓடிட்டானா?''

''அப்படி ஓடினாதான் சப்தம் கேட்குமே... ஓடினா கழுகுகளும் விடாதே...''

''நல்லாப்பாரு... நல்லாப் பாரு...''

- அவர்கள் கோவிலைச் சுற்றி வந்தனர். ஏமாற்றக் குரல் உள்ளே இருக்கும் ஜான்சன் காதில் துல்லியமாகக் கேட்டது. திரும்பவும் சன்னதி வாயிலில் வந்து கூடி நின்றனர். அவர்களுக்கு இருந்தால் நாற்பது வயது இருக்கலாம்... முகத்தில் நரைக்காத கறுப்பு தாடி!

''மாதேஸ்வரா... உள்ளற சன்னதிக்குள்ள நுழைஞ்சிருக்கானான்னு பாரு...''

- ஒருவன் கூறிட, ஒருவன் உள்ளே எட்டிப் பார்த்தான்... ஜான்சனுக்கு தீக்குளித்து விட்ட மாதிரி உடம்பு காந்தத் தொடங்கி விட்டது.

ஆனால் காலடியில் உள்ள பாம்பு அவர்களைப்

பார்த்து சீறவும், உள்ளே எட்டிப் பார்த்தவன் நின்றான்... அப்படியே பின்னால் சென்றவன்,

''உள்ள நுழைஞ்சிருக்க வாய்ப்பில்ல... பாம்பு சீறுது பார். உள்ள போயிருந்தா போட்டுத்தள்ளியிருக்கும். போற துணிச்சலும் யாருக்கும் வராது.'' என்றான்.

''அப்ப நமக்கு வந்த அந்த செய்தி...?''

''செய்தி உண்மையா இருக்கலாம். வந்தவன் பாதியில கூட பயந்து திரும்பியிருக்கலாம்...''

''எதுக்கும் ஜாக்ரதையா இருக்கணும். சங்கரியை நாம பலி கொடுத்து செய்த பூஜை பத்தி கடைசி வரை யாருக்கும் எதுவும் தெரியக் கூடாது. நாலு திசைக்கு நாலு கன்னியைப் பலி கொடுத்து நாம பண்ண நினைக்கற பலி பூஜைல இதுவரை ஒரு பூஜைதான் ஈடேறியிருக்கு... இன்னும் மூணு பாக்கியிருக்கு. இந்த சன்னதியில் அதை ஈடேத்தினா தான் நமக்கும் முழு சக்தி கிடைக்கும். அதுக்குப் பிறகு மாந்திரீக உலகத்தோட ராஜாக்கள் நாமதான். சென்ட்ரல், ஸ்டேட்னு அவ்வளவு கவர்மென்ட்டையும் நம்ம சக்தியால நாம ஆட்டி வைக்கலாம்...''

''ஆட்டி வைக்கறது அப்புறம். இந்த ஒன்பதாம் தேதி ராத்திரி பன்னெண்டு மணிக்கு சங்கரியே திரும்ப வந்து பிறக்கப் போறாங்கற அந்த விஷயம் முதல்ல நடக்குதான்னு பார்ப்போம். அப்படி மட்டும் நடந்துட்டா அந்தக் குழந்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் தவழற எல்லைக்குக் கூட போகக் கூடாது... நாம எப்படியாவது தீர்த்துக் கட்டிடணும்.''

அவர்கள் பேசிக் கொள்வது தெளிவாக உள்ளே ஜான்சனுக்கும் கேட்டது. அப்போதே அவனுக்கு என்ன நடந்தது, என்ன நடக்கப் போகிறது என்கிற எல்லாமே புரிந்து விட்டது. மனதுக்குள் 'பாவிங்களா... இந்தக் காலத்துலையும் இப்படி ஒரு கூட்டமா?' என்கிற கேள்விதான் எழும்பியது. அவர்கள் அதற்குப் பிறகு திரும்பிச் சென்றார்கள். எந்த பக்கம் சென்றார்கள், எப்படி சென்றார்கள் என்று எதுவுமே உள்ளிருக்கும் ஜான்சனுக்குத் தெரிய வில்லை.

சப்தம் முற்றாக அடங்கவும் உறைந்து போன நிலையில் கீழே பார்த்தான். அந்தப் பாம்பைக் காணவில்லை. பாம்பு மோசமானது என்று நினைத்துக்



கொண்டிருப்பது தவறு போல அவனுக்கு அப்போது தோன்றியது. அது மட்டும் இல்லாவிட்டால் தன் உயிரே போயிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்தவனுக்கு அந்த பாம்பைக் கும்பிடத் தோன்றியது.

நல்ல வேளையாக அவன் பதுங்கிக் கிடந்த நேரத்தில் அகிலாவும் செல்போனில் கூப்பிட்டு சிக்கலில் மாட்டி விடவில்லை.

வெளியே சென்றபின் கூர்மையாக நாலா பக்கமும் பார்த்தான். தான் வந்த வழியாகப் போவது புத்திசாலித்தனம் இல்லை என்று உணர்ந்தபின் பரிசல் கிடந்த இடத்தைப் பார்த்தான். அது இல்லை. அதை அந்த நாலு பேர் தான் பயன் படுத்தியிருக்க வேண்டும் என்று ஊர்ஜிதப் படுத்திக் கொண்டான். வந்த வழியிலேயே திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

எதுவும் நடக்கும் என்கிற ஒரு சூழல்!

## 6

'இந்த உலகில் பலவிதமான கலைகள் உள்ளன. பள்ளிக்கும் கல்லூரிக்கும் சென்று படிக்க முடிந்த கல்விக் கலைகள் ஒருபுறம் என்றால், குருவைத் தஞ்சம் புகுந்து அவருக்கு சேவை செய்து மெல்ல மெல்ல கற்றுக் கொள்ள வேண்டிய சில வாமாச்சார கலைகளும் இருக்கவே செய்கின்றன. எந்த ஒரு படிப்பு படிக்கவும் அதற்கென ஒரு அடிப்படைத் தகுதி தேவைப்படுகிறது. வாமாச்சார கலை படிக்கவும் ஒரு தகுதி தேவை. அந்தத் தகுதியை அவரவர் ஜாதகத்தைப் பார்த்தே நாம் அறிய முடியும். அசாத்ய பொறுமை, மனோதிடம், அல்ப ஆசைகளை வெல்லும் திறன் · இதெல்லாம்தான் அதற்கு அடிப்படைத் தகுதி.

ஜான்சனைப் பார்த்த அகிலாவுக்கு ஜிலீர் என்றது!

''ஜான்சன்... நல்லபடியா வந்துட்டியா?'' என்று அவன் முன் ஓடி வந்தாள். அவனும் வந்த வேகத்தில் அந்த ஏ/சி அறையில் பேசாமல் அமர்ந்து விட்டான். ட்டையில் அங்கங்கே கிழிசல். தலையில் ட்செடியின் காய்ந்த இலைகள் நெல் உமி போல ட்டிக் கொண்டிருப்பதையும் பார்க்க முடிந்தது. நெற்றியில் முள்ளின் கிறல் ரத்தவரியாக காட்சி தந்தது. ''சொல்லு ஜான்சன்! என்ன நடந்தது? உன்னைப் பார்க்கும் போதே தெரியுது... நீ பெரிய ஆபத்தைக் கடந்து வந்திருக்கேன்று'' - என்று ஆரம்பித்த அகிலா அவனுக்கு தன் கையால் குளிர் பானமும் கொண்டு வந்து கொடுத்தாள்.

''இல்ல மேடம்... இதைக் குடிக்கற ஒரு மனநிலை இப்ப எனக்கு இல்லை.''

''சரி... என்ன நடந்தது சொல்...''

''சொல்றேன்... உங்க மனசையும் திடப்படுத்திக் குங்க. என்னால முடிஞ்ச அளவு அந்தக் கோவிலை படமும் எடுத்துட்டேன். உண்மைல அது நல்ல கோவில் மேடம்... அங்க இருக்கற சாமியும் ரொம்ப நல்ல சாமி தான்.''

- ஜான்சன் அளித்த சர்ட்டிபிகேட் அகிலா முகத்தில் ஆச்சரிய வரிகளாய் பரவியது.

''என்ன பாக்கறீங்க... அங்க இருக்கற கழுகுங்க... அங்க நான் பார்த்த பாம்புங்க... எல்லாமே ரொம்ப ரொம்ப நல்லவை.

கழுகுகள் சப்தம் போடவும்தான் சுதாரிச்சேன்... சாமி சிலை பெருசா இருந்ததாலதான் பின்னால ஒளிய முடிஞ்சது. காலடில கிடந்த நல்ல பாம்பாலதான் எதிரிகளும் உள்ள வந்து சோதனை போட்டு என்னைக் கண்டுபிடிக்க முடியலை.''

- ஜான்சனின் விளக்கத்தைக் கேட்டவள்,

''இப்படி துண்டு துண்டா சொன்னா எப்படி ஜான்சன்? முழுசா ஆரம்பத்துல இருந்தே சொல்...'' என்றாள்.

''சொல்றேன் மேடம்...'' என்று ஊருக்குள்



நுழைய ஆரம்பித்ததில் இருந்து நடந்த அவ்வளவையும் சொல்லி முடித்தான். அகிலாவுக்குள்ளும் இப்போது ஒரு தெளிவு. அதைக் கேள்விகளாய் கேட்டாள்.

''ஜான்சன்... அப்ப மாம்பாக்கம் ஞான சுந்தரம் மகள் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப் படலை...? பலிதான் கொடுக்கப் பட்டிருக்கா...?''

''நிச்சயமா...''

''இந்தக் கொலைக்கும் கடவுளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது - அப்படித்தானே?''

''நிச்சயமா... இது சாமி பேர்ல அந்த நாலுபேர் செய்த சதி.''

''சரி... அவங்களுக்கு நீ கோவிலுக்குப் போன விஷயம் எப்படி தெரிய வந்தது...?''

''நிச்சயமா மாம்பாக்கத்துல அவங்களுக்கு சப்போர்ட் பண்ண யாரோ இருக்காங்க...''

''ரைட்... இந்த விஷயம் இப்படி ஒரு மிஸ்ட்ரி க்ரைமா இருக்கும்போது, 'சங்கரி திரும்ப வந்து பொறக்கப் போறா. அவ கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டா... அவ பழிவாங்குவா'ன்னு வர்ற செய்திகள்ளாம்...?''

''அங்கதான் எனக்கு குழம்புது!''

''அப்ப பூர்வஜென்மம்கற விஷயம்லாம் கப்ஸா தான். நாம யூகிக்க முடியாதபடி வேற ஏதோ இருக்கு... அப்படித்தானே?''

''நிச்சயமா...''

''ரைட்... இனியும் நாம போலீஸ் கிட்ட போகாம இருந்தா அது பெரிய தப்பாயிடும் இல்லையா?''

''அப்சல்யூட்லி...''

''ஊத்துக்கோட்டை திருவள்ளூர் மாவட்டம் தானே?''

''ஆமாம் மேடம்... திருவள்ளூர் க்ரைம் ப்ராஞ்ச் சூப்ரெண்ட் ஆஃப் போலீஸையோ இல்ல டி எஸ் பியையோ பார்த்து அவங்கள ரகசியமா மோடிவேட் பண்ணியே தீரணும்.''

''இல்லேன்னாதான் இன்னும் மூன்று பெண்களுக்கு அப்படி ஒரு கொடுமை நடந்துடுமே...''

''ஆமாம் மேடம்... நம்ம பத்திரிகைலயும் என்

அனுபவத்தை தெளிவா எழுதிட்றது நல்லது. அப்பதான் கோவில்ல எந்த மர்மமோ மாயமோ இல்லைங்கறது ஊருக்குத் தெரியவரும்..."

"நோ... அவசரப்படாதே ஜான்சன். அந்த நாலு பேரும் இதான் சாக்குன்னு தப்பிச்சி ஓடிடுவாங்க. அவங்களை பிடிச்சே தீரணும்."

"அதுக்கு என்ன பண்ணனும்னு சொல்றீங்க...?"

"அங்க சாமிக்கு சக்தி இருக்கு... நீ பாதி தூரம் போய்ட்டு பயந்து போய் திரும்பி வந்துட்டேன்னு செய்தி போடுவோம். இதனால கோவிலபத்தின பயம் அப்படியே நீடிக்கும். அந்த நாலு பேரும் கூட எங்கேயும் போயிடாம தங்களோட அடுத்த கட்ட டார்கெட்டுக்கு தயாரா வாங்க..."

"அதுவும் சரிதான்... அதே சமயம் அவங்க ஞானசுந்தரம் சாருக்கு பொறக்கப் போற குழந்தை யையும் எப்படியாவது கொன்னுட்றதுங்கற எண்ணத்துல இருக்காங்க..."

"அப்ப அவங்க தங்களால பலி கொடுக்கப்பட்ட சங்கரி நிச்சயம் திரும்ப பிறந்து வருவான்னு நம்பறாங்கன்னு தெரியுது... அப்படித்தானே?"

"ஆமாம்... வர்ற ஒன்பதாம் தேதி இரவு 1[illegible] மணிக்கு ஞானசுந்தரம் சாருக்கு பெண் குழந்தை பிறந்துட்டா அந்த பழிவாங்கற விஷயம் அப்பவே பாதி அளவுக்கு உண்மைன்னும் ஆயிடுது."

"வெரி பெக்கூலியர் கேஸ்... ஒரு பக்கம் மூட நம்பிக்கை; இன்னொரு பக்கம் சாத்யமில்லாத ஒரு சம்பவம். நடுவுல நம்மைப் போன்றவர்களோட விஞ்ஞான பூர்வமான பார்வை...! ஒண்ணு மட்டும் உறுதி ஜான்சன் - இந்த விஷயம் நம்ம பத்திரிகைக்கே ஒரு திருப்பத்தை தரப்போகுது."

"மேடம் எனக்கு...?"

"நிச்சயம் லட்ச ரூபா ரிவார்டாவது உண்டு ஜான்சன் - கூடவே அசோசியேட் எடிட்ட புரமோஷனும்..."

ஜான்சனுக்கு அப்பொழுதே வானத்தில் மிதக்கிற மாதிரி இருந்தது. அகிலாவோ கேள்வி களின் பிடிக்குள் இருந்தாள். 'இந்த ஒன்பதாம் தேதி பன்னிரெண்டு மணி விஷயத்தைக் கிளப்பியது யாராக இருக்கும்? ஒரு வேளை சங்கரி நிஜமாலுமே



வந்து பிறந்து விட்டால்...?'

வழக்கம் போல வாரப்படாத அவளது கூந்தல் முன் விழுந்து முகத்தை மறைக்க அதை ஒதுக்கி விட்டுக் கொண்டவள் - அப்படி எல்லாம் தனக்குள் கேட்டுக் கொண்டதற்காக சற்று வெட்கமும் அடைந்தாள்.

ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

அந்த நான்கு பேருக்காக அவளைக் கடந்து வேறு யாரோ கூட ஆப்பு தயார் செய்து கொண்டிருப்பது...

ஒன்பதாம் தேதி வந்து விட்டது!

ஞானசுந்தரத்தின் வீட்டில் ஒரு இனம் புரியாத பரபரப்பும் படபடப்பும் தெரிந்தது. ஆனால் பாக்யலட்சுமியிடம் பெரிதாக எதுவும் தெரியவில்லை. தனது நிறைமாத கர்ப்ப வயிற்றுடன் முடிந்த வரை நடமாடிக் கொண்டிருந்தாள். கொல்லைக்கு வந்து மாட்டுக்கு பருத்திக் கொட்டை புண்ணாக்கு போடப் பட்டிருக்கிறதா என்பதை இரு கண்களாலும் பார்த்து ஊர்ஜிதம் செய்து கொண்டாள்.

வேலைகாரர்கள் நெளிந்தனர்.

ஞானசுந்தரம் கூட "ஏன்தாயி... ஒரு இடத்துல சிவ னேன்னு உட்கார்ந்திருக்கக் கூடாதா... உனக்கென்ன இளவட்டம்னு நினைப்பா?" என்று கேட்டார்.

பாக்ய லட்சுமி அதை காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. சமையல் கட்டுக்கு சென்று அவளே சுக்குக்காபி போடத் தொடங்கினாள்.

பின்னாலேயே வந்தார் ஞானசுந்தரம்.

"பாக்யம்... என்ன பாக்யம் இது - நான் தெரியாமதான் கேக்கறேன்... உனக்கு ஐய்யரவ மாவே இல்லையா?"

"எதுக்குங்க ஐயரவப்படணும்...?"

"இல்ல... இன்னிக்கு நம்ம சங்கரி வந்து பொறப்பான்னு..."

"அவ எங்கங்க பொறக்கப் போறா... டாக்டருங்க வயித்தை அறுத்து எடுக்கப் போறாங்க. ஆனா வெளியில அப்படிச் சொல்லப் போறோம்."

- பாக்யலட்சுமி அப்படிச் சொன்னது ஞானசுந்தரத்துக்கே ஒரு புதிய விஷயம்.

''பாக்யம்... என்ன நீ சொல்றே... நீ தானே 'கனவுல வந்து சங்கரி சொன்னாள்'ன்னு சொன்னே...'' - அதிர்வுடன் கேட்டார்.

''இப்பல்லாம் எங்கங்க செத்துப் போன ஒரு உசுர் கனவுல வந்து சொல்லிக்கிட்டிருக்கு...? அப்படி சொல்ல முடியும்னா தான் கொலை செய்யப்பட்டு உயிரை விட்ற அவ்வளவு ஆத்மாக்களும் பெத்தவங்க கனவுல வர்றதுக்கு முந்தி போலீஸ் இன்ஸ்பெக்டர் கனவுல போய் நடந்ததைச் சொல்லி குத்தவாளியையும் பிடிச்சுக் கொடுத்துடுவாங்களே?''

''பாக்யம்...''

''பதட்டப்படாதீங்க... நம்ம மகளை அநியாயமா கொலை செய்தவங்களை தெரிஞ்சிக்கவும் ண்டிக்கவும் எனக்கு வேற வழி தெரியலை. அதான் இந்த வயசுல கனவு வந்ததா சொன்னேன். உங்க உயிரணுவை செயற்கை முறைல டாக்டர்கிட்ட சொல்லி கர்ப்பத்துலையும் வெச்சுகிட்டேன். எப்படிப் பார்த்தாலும் நான் செய்திருக்கறது சாதனை தான். சங்கரி போய்ட்டாலும் நமக்கு ஒரு மக இருக்காங்கறது பெரிய ஆறுதல்... நம்ம மகளைக் கொன்னவங்களப் பிடிக்கப் போறோம்கறது அடுத்த கட்ட ஆறுதல்...''

''அடிப்பாவி... இதை ஏன் என்கிட்ட முதல்லையே சொல்லல...?''

''நாலு பேரோட பேசிப் பழகுற நீங்க எங்கையாவது உளறிட்டா?''

''நான் உளறுறவனா?''

''இல்லையா... நீங்க உளறப் போய்தானே பத்திரிகை டிவின்னுல்லாம் நம்ம ஊருக்குள்ள ஒரு கூட்டமே வந்திச்சு. 55 வயசுல நான் பிள்ளை பெறப் போறேங்கறது இப்ப நாடறிஞ்ச ஒரு விஷயம். அதுக்கு யார் காரணம் - நீங்கதானே?''

''இல்லாட்டி உன் கர்ப்பம் வெளிய தெரியாதா... என்ன புள்ள பேசறே நீ?''

''கர்ப்பம் தெரிஞ்சிடும்... ஆனா அது எப்படிப் பட்ட கர்ப்பம்னு தெரியறதுல தானே வில்லங்கமே



இருக்கு...''

''பாக்யம்... நீ நிஜமாதான் சொல்றியா... அப்ப சங்கரி கனவுல வந்து சொன்னதா சொன்னதெல்லாம் பொய்யா...?''

''என்னாங்க நீங்க... அப்பவே 'உன் கனவுல வந்தவ என் கனவுல மட்டும் ஏன் வரலே?'ன்னு நீங்க கேக்கலையே. இதுல இருந்தே தெரியல உங்களுக்கு?''

- பாக்யலட்சுமி சமையல் கட்டுக்குள் ஒரு ஞான ரதத்தையே ஞானசுந்தரத்துக்குள் ஓட்டி முடித்து விட்டாள். ஞானசுந்தரத்திடம் ஒரு அசாத்ய அமைதி ஏற்பட்டு அவரையும் மௌனியாக்கி விட்டது.

''என்னங்க பேச்சையே காணோம்?''

''என்னத்த பேச... நான்லாம் ஒரு அதிசயம் நடக்கப் போகுதுன்னு எவ்வளவு தூரம் நம்பிக்கையோட இருந்தேன் தெரியுமா?''

''இப்பவும் சொல்றேன்... அதிசயம் நடக்கத் தாங்க போகுது. பூர்வஜென்மம்ங்கற பேர்ல புத்தியைப் பயன் படுத்தி...''

''போலீஸே எனக்கென்னன்னு இருக்கற நம்ப விஷயத்துல பெருசா ஒரு நல்லது நடக்கும்னு எனக்குத் தோணலை பாக்யம்.''

''அவங்கள்ள கூட களவாணிங்க இருக்கலாம். யார் கண்டது?''

''நீ இவ்வளவு தூரம் யோசிச்சிருக்கேங்கறத நினைக்கறப்ப. எனக்கு மலைப்பா இருக்கு பாக்யம்...''

- பேசிக் கொண்டே இருவரும் சமையல் கட்டை விட்டு வெளியில் வந்தனர். கூடத்தில் சங்கரியின் மாலையிட்டு அலங்கரிக்கப்பட்ட படம்!

பாக்யலட்சுமி அந்த படத்தின் முன் சென்று நின்றாள்.

கண்களில் கண்ணீர் திரண்டு விட்டது.

''அம்மாடி... அம்மா... இந்தக் காலத்துக்கு தகுந்த மாதிரி நடந்து கிட்டிருக்கேன்... நீ ஆத்ம ரூபமா இருந்து பாத்துகிட்டு தான் இருப்பே... உனக்கு ஏற்பட்டது போல இன்னொரு பொண்ணுக்கு நடந்துடக் கூடாது. அதுதான் என்னோட இந்த முயற்சிக்கே

காரணம்... நான், நீ வந்து பொறக்கப் போறேன்னு சொன்னது என்னோட கற்பனையா இருக்கலாம். ஆனா அதுவே உண்மையா இருந்தா எவ்வளவு சந்தோஷப்படுவேன் தெரியுமா?''

- என்று வாய் விட்டே பிரார்த்தனை செய்தான். கூடவே ஞானசுந்தரம்! அவரும் புலம்பத் தொடங்கினார் ''காசு பணம் இருந்து என்னம்மா பிரயோஜனம்... ஒத்த மக உனக்கு ஒரு கொடுமை ஏற்பட்டப் போ அதைத் தடுக்க முடியலியே. இந்த கிராமத்துல மட்டும் இல்லாம இருந்திருந்தா உனக்கு இப்படி எல்லாம் ஆகியிருக்குமா?'' - என்றும் தனக்கு தோன்றிய விதத்தில் கேட்டு நின்றார்.

அப்போது வேலைக்காரன் ஒருவன் சற்று தொலைவில் வந்து நின்றவனாக ''ஐயா... ஸ்டேஷன்ல இருந்து இன்ஸ்பெக்டர் வந்துருக்காரு...'' என்றான்.

''இன்ஸ்பெக்டரா... எதுக்குய்யா?''

''தெரியலய்யா... உங்களப் பாக்கணுமாம். வெளிய மரத்தடில நாற்காலிய போட்டு உட்கார வெச்சிருக்கேன்.'' என்றான்.

''சரி போ வர்றேன்...''

- ஞான சுந்தரத்துக்கு இனி ஒவ்வொரு விஷயமுமே பரபரப்பாகத்தான் போகும் என்று தோன்றியது.

## 7

வாமாச்சாரம் என்னும் கலையை கொலையோடு ஒப்பிடுவார்கள். ஆம் உலகில் பிறக்கும் யாராக இருந்தாலும் ஒரு நாள் இறந்துதான் தீர வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. இறந்து போக முடியாதபடி ஒரு உயிரணு கூட இந்த உலகத்தில் இல்லை. இறப்பு என்பது ஒரு



நாள் வந்துதான் தீரும். ஆனால் இதை கொலைச் செயல் மூலம் எப்போது வேண்டுமானாலும் வரவைக்கலாம். அதாவது உயிருடன் உள்ள ஒருவரை அவர் இயல்பாக இயற்கையாக இறக்கும் முன் கொலை செய்து உடம்பில் இருந்து உயிரைப் பிரிக்கலாம்.

ஆக... இந்த உலகத்தில் உயிர் பிரிவது என்பது இரு விதத்தில் நிகழும் சாத்யம் உள்ளது. ஆனால் பிறப்பது என்பது மட்டும் ஒரு விதமாகத் தான் நிகழ்கிறது. முன்ன தாகவோ அல்லது விரும்பும் போதோ ஒரு உயிரைக் கொல்ல முடிவது போல பிறக்க வைக்க முடிவதேயில்லை.

மரணம் எப்படி இயற்கை மரணம், செயற்கை மரணம் என இரண்டாக உள்ளதோ அதே போல உலகில் நிரூபிக்க முடிந்த நேரான கலைகள் இயற்கையானதாகவும், நிரூபிக்க முடியாத வாமாச்சார கலைகள் அதற்கு எதிரானதாகவும் உள்ளது.

மரத்தடியில் அமர்ந்திருந்த இன்ஸ்பெக்டர் தனராஜ், ஞானசுந்தரம் ஒரு துண்டை போர்த்திக் கொண்டு வரவும் எழுந்து நின்றார்.

''வாங்க தம்பி... என்ன விசயம்?''

''ஒரு முக்கியமான விசயமாத்தாங்க பார்த்துட்டு போக வந்தேன்.''

''பின்ன என்ன பிரியாணி சாப்பிட வா வருவீங்க...? சொல்லுங்க... என்ன விஷயம்?''

''எங்க டிபார்ட்மெண்ட்டுக்கு உங்க மக கொலை விசயத்துல சில துப்புங்க கிடைச்சிருக்கு.''

''அப்படியா... ஆச்சரியமா இருக்குதே! என்ன அது?''

''முதல்ல உங்களுக்கு ஒரு விசயத்துக்கு நன்றி தெரிவிச்சிக்கறேன். கொலையாளிங்க எப்பவும் போல நடமாடினாதான் புடிக்கறது சுலபம்னு நாங்க சொன்னதைக் கேட்டு நீங்க 'சாமி கூட என்

மகளை அடிச்சுப் போட்டிருக்கலாம்'னும் பேசினீங்க பாருங்க... அதுக்கு!''

''சரி... அதனால நீங்க நினைச்ச மாதிரி அவங்க நடமாடினாங்களா? அவங்க யார்னு தெரிஞ்சிச்சா?''

''ஆமா... நாலு மந்திரவாதிங்கதான் இந்த அநியாயத்தைப் பண்ணியிருக்காங்க. அவங்க உங்க மகளை அநியாயமா கடத்திக் கிட்டு போய் கோவிலோட ஒரு திசைல நிறுத்தி பலி கொடுத்து கொன்னுருக்காங்க...''

''என்னது பலியா... மந்திரவாதிங்களா?''

''ஆமாம்... சண்டபேரி அம்மனை பலி தெய்வமாதானே இந்த ஊரும் உலகமும் பாக்குது. அந்தக் காலத்துல பல மந்திரவாதிங்க அங்கையே இருந்ததால்லாம் கூட கதைங்க இருக்குதே...''

''இந்தக் காலத்துலயும் பலி கொடுக்கற விசயமெல்லாம் இருக்குதுங்களா?''

''இப்பவும் வருஷம் ஒரு தடவை தானே அந்த கோவிலுக்குப் போறீங்க. ஒரு நாள் போறதுக்காக 364 நாள் பூட்டில்ல அந்த கோவில் இருக்கு... நீங்க மாறாம இருக்கற மாதிரியே பலி பூசைல நம்பிக்கை உள்ளவங்களும் இருக்கத் தானே செய்வாங்க...''

''சரிங்க... யாருங்க அந்த நாலு பேர் - பிடிச்சிட்டீங்களா இல்லை இனிதான் பிடிக்கப் போறீங்களா?''

''இப்பதானே காதுக்கு விசயம் வந்துருக்கு. அது மட்டுமில்ல... கோவில்ல எந்த குந்தகமும் இல்ல. யாரும் போய் வராததால பாம்பு தேளுங்க பெருத்துப் போச்சு. போய் வரத்தொடங்கிட்டா அதுங்களும் ஓடிடும்...''

''நீங்க என்ன சொல்றீங்க?''

''கோவிலபத்தின உங்க நம்பிக்கைகள தூக்கி தூரப் போடுங்க. நீங்க அசட்டுத்தனமான நம்பிக்கையோட இருக்கறதும் - அருள் தர்ற சாமியையே பயங்கரமா நினைக்கறதும்தான் இப்ப சிக்கலுக்கு காரணம். அதான் ஒரு நாலு பேர் எங்க இருந்தோ வந்து உங்க மகளையே பிடிச்சுகிட்டு போய் பலியும் கொடுத்துட்டாங்க...''

''சரி... நீங்க முடிவா என்ன சொல்லவர்றீங்க?''



''அவங்கள நாங்க பிடிச்சிடுவோம். இனி ஒரு பலியோ பூசையோ அங்க நடக்காது. எங்க டிபார்ட்மெண்ட் முழிச்சிகிச்சு. கோவிலை சுத்தி - ஆடுமாடு மேய்க்கற சாக்குல இப்பவே ஒரு ஐம்பது போலீஸ்காரங்க சுத்திக் கிட்டிருக்காங்க. அதே சமயம் 'கோவில் பக்கம் யாரும் போகக் கூடாது - போனா உயிர் போயிடும். சாமி அவ்வளவு கோபத்தோட இருக்குது'ன்னு ஒரு கட்டுரை இன்னிக்கு புத்தகத்துல வந்துருக்கு. பாருங்க!''

இன்ஸ்பெக்டர் தனராஜ் தன் வசமிருந்த 'அமுதம்' இதழைக் காட்டினார். அதில் ஜான்சன் எழுதிய கட்டுரை... அது ஏரிக்குள் இருந்து பாதிதூரம் கூட அவனால் போக முடியவில்லை என்றும் அவனைக் கழுகுகள் துரத்தியதாகவும் ஒரு இடத்தில் சண்டபேரி அம்மனே கண்ணில் தோன்றியதாக எல்லாம் செய்தி. கிராஃபிக்ஸ் உதவியுடன் அவனைக் கழுகுகள் துரத்துவது போல படமும் தயார் செய்து போடப்பட்டிருந்தது.

''ஐயோ என்னங்க தம்பி இது... இதை பாக்கறச்சே சண்டபேரி ஆத்தா அங்க துடியோட இருக்கற மாதிரில்ல தெரியுது...?''

''ஆமாம்... அப்படி தெரியணும்னுதான் இப்படி ஒரு நியூஸ்! இதை அந்த நாலு கொலைகார மந்திரவாதிகளும் பார்ப்பாங்கல்ல...?''

''அது யாருக்கு தெரியும்?''

''பார்ப்பாங்க... ஏன்னா அவங்களுக்கும் இந்த பத்திரிகைக்காரர் அங்கபோனது தெரிஞ்சிருக்கு. ஆகையால பத்திரிகைக்காரன் என்ன எழுதப் போறான்னு கவனிச்சுகிட்டே இருப்பாங்க...''

''சரி... அவங்க கவனிக்கறதாவே இருக்கட்டும்... அதுக்கென்ன?''

''இப்படி ஒரு தகவலைப் படிச்சா அவங்களுக்கு கொண்டாட்டம்தானே?''

''ஓ... நீங்க அப்படி வர்றீங்களா?''

''அப்படியேதான்... இது அவங்கள தாராளமா நடந்துக்க வைக்கத் தூண்டும். அவங்களும் அவங்க வேலையை வேகமா செய்யப் பார்ப்பாங்க. அதுலையும் அடுத்த மாசம் ஆடி பிறக்குது. ஆடி 18க்கு ஊரே

திரளும்ங்கறது அவங்களுக்குத் தெரியாதா என்ன... அதனால அதுக்குள்ற பலிபூசையை முடிச்சுக்கறது அவங்க நோக்கமா இருக்கும்.''

''ஓ... அப்படி அவங்க அங்க செயல்படும் போது வளைச்சுப் பிடிக்கறதுதான் உங்க எண்ணமா?''

''ஆமாம்...''

''ஒரு வகைல இதைக் கேக்க சந்தோஷமா இருக்கு... என் அழகு மகளை அநியாயமா பறி கொடுத்துட்டு துடிச்சிகிட்டு இருக்கற எங்க நிலை ஊர்ல யாருக்கும் வரக்கூடாது...''

''நான் வந்திருக்கறது இதைச் சொல்ல மட்டுமில்ல... ஒரு முக்கியமான விசயத்தைக் கேட்கவும் தான்...''

''என்ன அது?''

''உங்க செத்துப் போன மக திரும்ப வந்து பிறக்கப் போறதா ஒரு பேச்சு இருக்கே... அதுலையும் இன்னிக்கு ராத்திரி 12 மணிக்கு உங்க மக வந்து பொறக்கப் போறாங்கறது எந்த அளவுக்கு உண்மை?''

''ஏன் கேக்கறீங்க...? நீங்க அந்த மந்திர வாதிங்களைப் பிடிக்கறதுக்கும் எங்களுக்கு மக பிறக்கறதுக்கும் என்ன தொடர்பு?''

''இல்ல... விஷயம் இன்டர்நெட்லெல்லாம் போயிருக்கு. பலரோட பார்வை இன்னிக்கு இந்த ஊர் மேலதான். நாங்க ஒரு பக்கம் அந்த களவாணிங்கள பிடிச்சுடப் போற நிலைல உங்க மக திரும்ப பிறந்து என்ன பிரயோஜனம்? அதுக்கு தான் கேட்டேன்...''

- இன்ஸ்பெக்டர் தனராஜ் கேள்விக்குள் ஒரு சன்னமான நியாயம் தென் பட்டு ஞானசுந்தரத்தை மௌனமாக்கியது.

''சொல்லுங்கய்யா... உங்க மனைவிக்குக் கனவு வந்ததுங்கறது நெஜமா இல்ல அவங்களோட மனப்பிராந்தியா?''

- தனராஜ் நெருக்கினார். ஞானசுந்தரம் என்ன சொல்வது என்று தெரியாமல் நெளிந்த போது உள்ளிருந்து ஏதோ சப்தம்.

திரும்பிப் பார்த்தார்.

வேலைக்காரன் ஓடி வந்த படி இருந்தான்.



அவனிடம் அவலக்குரல்.

''ஐயா... அம்மா கால் இடறி பீரோ மேல விழுவப் போய் அது அம்மா மேல சாஞ்சிடிச்சு. அம்மாகிட்ட பேச்சு மூச்சு இல்லை...'' என்ற அவனைப் பார்த்து அப்படியே ஸ்தம்பித்து விட்டார் ஞானசுந்தரம். ஒரு விநாடி என்ன செய்வது எதை செய்வது என்று கூடத் தோன்றவில்லை. இன்ஸ்பெக்டர் தனராஜோ பாக்யலட்சுமியைக் காப்பாற்றிவிட வேண்டும் என்கிற ஒரு வேகமுடன் உள் நோக்கி ஓடினார்.

உள்ளே பாக்யலட்சுமி ஒரு புறமும் பீரோ ஒரு புறமும் கிடக்க - பாக்யலட்சுமியிடம் பேச்சு மூச்சு இல்லை. சுற்றி வேலைகாரர்கள். பதறியபடி வந்த ஞானசுந்தரம் ''பாக்யம் பாக்யம்...'' என்று அருகில் அமர்ந்து கொண்டு அழ ஆரம்பித்து விட்டார். ஒரு வேலைக்காரி மட்டும் இன்ஸ்பெக்டரிடம் நடந்ததை அப்படியே தான்பார்த்தது பார்த்த மாதிரி சொல்லிக் கொண்டிருந்தாள்.

''ஐயா... அம்மா திடீர்னு வேகமா நடந்து பீரோ கிட்ட போனாங்க... அப்படியே யாரோ தள்ளி விட்ட மாதிரி அதுமேல மோதி விழுந்தாங்க... அவங்க விழுந்த மறுநொடியே பீரோவும் யாரோ தள்ளிவிட்ட மாதிரியே அவங்க மேல விழுந்தது. அதுல வயிறு நல்லாவே நசுங்கிடிச்சுங்க. அம்மாகிட்டேயும் பேச்சு மூச்சு இல்லை.''

- வேலைக்காரி சொன்னதைக் கேட்டு இன்ஸ்பெக்டர் தனராஜிக்கு முதுகுத்தண்டில் ஒரு சில்லிப்பு ஏற்பட்டது. ஞானசுந்தரம் பதற ஆரம்பித்து விட்டார்.

''ஐயோ பாக்யம்... படிச்சு படிச்சு சொன்னேனே - கேக்காம இப்ப இப்படி கிடக்கறியே! ஐயோ! ஐயோ!'' - என்றவருக்கு கையும் ஓட வில்லை, காலும் ஓடவில்லை.

''ஐயா...! முதல்ல டாக்டர் கிட்ட கூட்டிகிட்டு போற வழியப் பார்ப்போம். இது பேசற நேரம் இல்ல...'' - என்று தனராஜும் துரிதப்படுத்தினார்.

அடுத்த சில நொடிகளில் அந்த வீட்டு முகப்பில் இருந்து ஒரு காரில் பாக்யலட்சுமியின் உடல் பயணமாக - இன்ஸ்பெக்டர் தனராஜ் வாசலில் நின்றபடியே பெருமூச்சு விட்டா2ர். சில நொடிகள் சிந்தனை செய்தவர் செல்போனை எடுத்துக் கொண்டு டி.எஸ்.பி.யை தொடர்பு கொள்ளத் தொடங்கினார்.

'குட் ஆஃப்டர் நூன் சார். மாம்பாக்கம் இன்ஸ்பெக்டர் தனராஜ் பேசறேன்...' என்று ஆரம்பித்தவர் நடந்ததை அப்படியே ஒப்பித்து முடித்தார். மறுபக்கமாய் டி.எஸ்.பி.யிடம் இருந்து பதில் கேள்வி:

''அப்ப இன்னிக்கு ராத்திரி 12 மணிக்கு குழந்தை பிறக்கும்ங்கற புரளி பொய்யா போச்சு. அப்படித் தானே?''

''ஆமாம் சார்... குழந்தை வயித்துக்குள்ளயே இறந்திருக்கணும்.. அனேகமா அதை ஆபரேஷன் பண்ணி வெளிய எடுக்கற நேரம் வேணும்னா ராத்திரி 12 மணியா இருக்கலாம்...''

''மை காட்... இந்த கேஸ் மாதிரி ஒரு பெக்கூலியர் கேஸை நான் பார்த்ததேயில்லை... பாவம் அந்த ஞானசுந்தரமும் அவர் மனைவியும். வயசுப் பொண்ணைத்தான் அநியாயமா பறி கொடுத்தாங்கன்னா அபூர்வமா பெற இருந்த பிள்ளையையும்ல பறி கொடுத்திருக்காங்க...''

''ஆமாம் சார். ஆனா எனக்கென்னவோ பீரோ மேல விழுந்தது ஒரு இயல்பான சம்பவமாவே தெரியல சார்...''

''என்ன சொல்றீங்க தனராஜ்...?''

''ஆமாம் சார்... இவங்க என்னதான் தடுமாறி அது மேல விழப்போனாலும் அது இவங்க மேல விழற துக்கு சான்ஸே இல்லை. ஒண்ணு யாராவது தள்ளி விட்டிருக்கணும்... இல்லேன்னா அமானுஷ்யமா ஏதோ நடந்திருக்கணும்...''

''அமானுஷ்யமாவா... இது என்ன வார்த்தை - அதுவும் ஒரு போலீஸ்காரன் வாய்ல இருந்து...?''

''சார்... மனித சக்திக்கு அப்பாற்பட்டு மிஸ்ட்ரியா நடக்கறத வேற எப்படி சார் சொல்றது?''

''மிஸ்ட்ரிங்கறதே பொய்தான் மிஸ்டர் தன்ராஜ்.



நம்ம கால்குலேஷனுக்கு அடங்காததை சில சமயம் அப்படி சொல்வாங்க. நீங்க இதை மிஸ்ட்ரியா நினைச்சா அது உங்களுக்குத்தான் நல்லதில்ல. நீங்க ஊங்க ரியல் என்ர்ஜியை அப்புறமா கொஞ்சம் கூட யூஸ் பண்ணமாட்டீங்க.''

''சாரி சார்... என் மனசுல பட்டதை பேசிட்டேன். தப்பா எடுத்துக்காதீங்க சார்.''

''ஓ.கே.. ஓ.கே.. நீங்க அடுத்தடுத்து என்ன நடக்குதுன்னு எனக்கு தகவல் தந்துகிட்டே இருங்க... அந்த கல்பிரிட்ஸ் நாலு பேருக்கும் தகவல் போய் அவங்க சுதாரிக்காம நம்ம வலைல கச்சிதமா விழணும். பாத்து...''

''டெஃபனட்லி சார்... அந்த நாலு பேர்ல யாராவது ஒருத்தர் இரண்டு பேர் மட்டும் அந்த கோவிலுக்கு வந்து சூழ்நிலை எப்படி இருக்குன்னு ஆழம் பாக்கலாம். அப்படி அவங்க வந்தா அவங்கள டச் பண்ண வேண்டாம்னு எல்லாருக்கும் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்துருக்கு சார். ஏன்னா இவங்க சிக்கிகிட்டு மீதி இருக்கறவங்க தப்பிச்சு ஓடக் காரணமாயிடுவாங்க... நம்ம டிபார்ட்மென்ட்டுக்கு நாலு பேருமே குறி. ஒருத்தர் கூட தப்பக் கூடாதுங்கறதுல தெளிவா இருக்கோம்...''

''குட்... நான் உங்ககிட்ட இருந்து வெற்றித்தகவல்களையா எதிர்பார்த்துக்கிட்டே இருப்பேன்...''

- டி. எஸ். பி. சொல்லி முடிக்க தனராஜும் செல்போனை அணைத்து அதற்கான தோல் கூட்டுக்குள் அது அடங்க இடம் கொடுத்து விட்டு - ஆஸ்பத்திரி நோக்கி புறப்படத் தயாரானார்!

## 8

'வாமாச்சார கலை பற்றி எப்போதும் இரண்டு கருத்துக்கள் இருந்து கொண்டேதான் இருக்கின்றன. ஒரு பிறவிக் குருடனுக்கு இந்த உலகம் என்பது சப்த மயமானதாகவும் திடத்திட்பமாக

வும் மட்டும்தான் திகழ முடியும். அவனி டம் வண்ணங்கள் பற்றிப் பேசுவதில் ஒரு பயனுமில்லை. அவ்வளவு ஏன்... வெளிச்சம் என்றால் என்ன என்று கூட அவனுக்குத் தெரியாது - அதை விளங்க வைப்பதும் கடினம். வேண்டுமானால் உஷ்ணம், குளிர்ச்சி என்று அவன் தோலுக்கு அதை உணர்வாக மாற்றி அறிமுகம் செய்யலாம்.

இப்படி ஒரு நிலையில் ஒரு குருடன் என் வரையில் 'இந்த உலகில் வெளிச்சம் என்பதே கிடையாது. உலகம் என்பது இருண்டதாக மட்டுமே இருக்க முடியும்' என்றுதான் கூறுவான். அவன் வரையில் அவன் அப்படி சொல்வதுதான் சரி... அதை நம்மாலும் மறுக்க முடியாது. அதற்காக உண்மையில் உலகில் ஒளியே இல்லை என்று நாமும் கருதுவோமா என்ன? வாமாச்சார கலைகளான மாந்திரீகம் மற்றும் சில ஏவல்கள் சூன்யங்கள் போன்றவை. முன்னால் நாமெல்லோரும் கூட குருடர்களே... இதை உணர சூட்சம அறிவு வேண்டும். நமது இயல்பான சிந்திக்கும் முறையில் இதைப் பற்றி சிந்தனை செய்தால் இது முட்டாள்தனமாகவே நமக்குத் தோன்றும்!

**ஆஸ்பத்திரி!**

பாக்யலட்சுமிக்கு ஆச்சிஜன் செலுத்தப்பட்டு அவளது போகவிருந்த உயிரைத் தடுத்து நிறுத்தியாகி விட்டது. ஆனால் நிறைய உதிரப்போக்கு ஏற்பட்டு எப்பொழுதும் எதுவும் நடக்கலாம் என்னும் நிலையில்தான் இருந்தாள் பாக்யலட்சுமி. செயற்கை முறையில் அவளுக்குள் கருவைப் புதைத்த டாக்டர் ஷர்மிளா அருகிலேயே இருந்து ஹார்ட் பீட் மற்றும் ப்ரெஷர் லெவலை மானிட்டர் வாயிலாகப் பார்த்தபடியே இருந்தாள்.



வெளியே தீ மிதிப்பது போலத் துடித்தபடி ஞானசுந்தரம் நின்று கொண்டிருந்தார். அவரால் தாளமுடியவில்லை. ஒரு கட்டத்தில் ICU வுக்குள் அத்துமீறி நுழைந்தே விட்டார். டாக்டர் ஷர்மிளாவும் அவரைத் தடுக்காமல் பாக்யலட்சுமியை அருகே சென்று காட்டிவிட்டு மௌனமாக வரும்படி சொல்லும் சைகையோடு தன் அறை நோக்கி நடந்தாள்.

அவரும் மௌனமாகப் பின் தொடர்ந்தார்.

அறைக்குள்...

''ஐயா... நான் சொல்லப் போறதைக் கேட்டு அதிர்ச்சி அடையாதீங்க... வயித்துக்குள்ள குழந்தை செத்துப் போச்சு. ஆபரேஷன் பண்ணித்தான் வெளிய எடுக்கணும். ஆனா அதுக்கு அவங்க உடம்புல பல்ஸ் செட்டாகணும். ஓவர் பிளீடிங் ஆனதுல ரொம்ப அனிமிக்கா இருக்காங்க. பிளட் கொடுத்து இம்ப்ரூவ் பண்ணித்தான் ஆபரேஷன் பண்ணணும். நான் தெரியாமதான் கேக்கறேன். அது எப்படி அவ்வளவு பெரிய பீரோ இவங்க மேல விழ முடியும்? இவங்க எதுக்கு அதுகிட்ட போனாங்க...?''

அடுத்த நொடி ஞானசுந்தரம் தலையில் அடித்துக் கொள்ளாத குறையாக அழுதார்.

''அம்மா... எனக்கு என்ன நடந்ததுன்னே தெரியாதும்மா. இன்ஸ்பெக்டர் வந்து என் கூட பேசிக்கிட்டிருந்தார். நானும் அவர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லிக் கிட்டிருந்தேம்மா...''

''நோ... நோ... இந்த பதிலை என்னால ஏத்துக்கவே முடியாது. எவ்வளவு சிரமப்பட்டு அவங்களை கர்ப்பம் தரிக்க வெச்சோம்கறது உங்களுக்கு நல்லா தெரியும். நான் இவங்க மூலமா ஒரு புரட்சியையே பண்ண நினைச்சிருந்தேன்.

இந்தக் காலத்துல ஒரு குழந்தை பிறக்கறதே அபூர்வமா இருக்கு. அப்படி ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு பொறக்கற வாரிசுங்க துரதிர்ஷ்டவசமா வாலிப வயசுல வியாதி - விபத்துன்னு இறந்து போயிடும் போது சம்பந்தப் பட்ட பெற்றோர்கள் நடை பிணமாயிட்றாங்க. அந்த

நடை பிணங்களுக்கெல்லாம் உயிர் கொடுக்கத்தான் நான் உங்க மனைவி விஷயத்துல அவங்களுக்கு கர்ப்பம் உண்டாகும்படி செய்தேன். ஒரு பெண் கர்ப்பம் தரிக்கறது ஒண்ணும் பெரிய விஷயமில்லை... 55 வயசு கர்ப்பம் தரிக்கறதுங்கறதுலதான் பெரிய விஷயம்... அப்படி கர்ப்பம் தரிச்ச அவங்களைப் பத்தி எல்லாருக்கும் தெரியணும்னு ஆசைப்பட்டுதான் விஷயத்தை நான் இன்டர்நெட்ல கசிய விட்டேன். கூடவே கொலை செய்யப்பட்ட உங்க மகளே திரும்ப வந்து பிறக்கப் போறான்னு நானும் உங்க மனைவியும் பேசித்தான் முடிவு செய்து அதையும் பரவ விட்டோம். இதனால உங்க மகளைக் கொலை செய்தவங்க எதாவது ஒரு வகைல உங்க மனைவியை - குறிப்பா பிறக்கற குழந்தையைக் கொலை செய்ய முன்வருவாங்க. அப்ப அவங்களைப் பிடிக்க என்ன செய்யணுமோ அதைச் செய்யணும்கறதுதான் எங்க திட்டம்.

அதாவது ஒரு கல்லுல இரண்டு மாங்காய்! ஒரு பக்கம் கொன்னுட்டா தப்பிடலாம்னு குற்றவாளிகள் நினைச்சுடக் கூடாது. இன்னொரு பக்கம் விஞ்ஞான உதவியோட 55 வயசு இல்ல 60 வயசுலையும் பிள்ளை பெத்துக்க முடியும்னு இந்த உலகத்துக்குக் காட்டணும்கறதுதான் எங்க நோக்கம். இப்ப எங்க நோக்கம் அப்படியே பொய்யா போச்சே...''

- டாக்டர் ஷர்மிளாவின் வருத்தம் ஞானசுந்தரத்தையும் தொற்றிக் கொண்டது.

''டாக்டரம்மா... நீங்க ஒரு விஷயத்துக்கு ஆசைபட்டீங்க. என் மனைவி ஒரு விஷயத்துக்கு ஆசைப்பட்டா. கடைசில ரெண்டும் நடக்காமப் போயிடிச்சு... இதைத்தான் விதிங்கறதா டாக்டரம்மா?''

''விதின்னு பேசறதுல எனக்கு நம்பிக்கை இல்லைங்க... மதி அதாவது புத்தி எதுக்கு இருக்கு?''

''ஒரு அளவுக்கு மேல நம்ம கைல எதுவும் இல்லைங்க... இதைப் புரிஞ்சுக்காத புத்தியால ஒரு பிரயோஜனமும் கிடையாது. எனக்கு... குழந்தை போனா போகட்டும்; என் பாக்யமாவது உசுரோட திரும்பக் கிடைச்சா போதும் டாக்டரம்மா...''



''இது விரக்திப் பேச்சு... கொஞ்சம் நல்லா யோசிச்சு சொல்லுங்க. உங்க வீட்ல நீங்க சந்தேகப்பட்ற மாதிரி யாராவது இருக்காங்களா?''

''நான் யாரைன்னு சொல்வேன்... என்னால தப்பாவே யோசிக்க முடியலைங்க...''

''இல்லீங்க... திரும்பவும் சொல்றேன். வீட்டுக்கு இப்பவே போங்க. நான் இப்ப உங்களுக்கு சில விஷயங்கள் சொல்லித் தரேன். அதன்படி பேசுங்க. பேசிட்டு கவனியுங்க. நான் அடிச்சு சொல்றேன்... உங்க வீட்டுக்குள்ள இருக்கற யாரோ ஒருத்தர்தான் பீரோவைத் தள்ளி உங்க மனைவியை - குறிப்பா வயித்து குழந்தையைக் கொல்ல முயற்சி செய்திருக்காங்க. அவங்க நிச்சயமா உங்க மகளைக் கொலைசெய்தவங்களோட தொடர்பு கொண்டவங்களாதான் இருக்கணும்...''

''நீங்க சொல்றதக் கேட்டு எனக்கு ஈரக்குலையே நடுங்குதுங்க. என் வீட்டுக்குள்ள அப்படி ஒரு கல் நெஞ்சக்காரங்க இல்லவேஇல்லீங்க... நான் இங்கையே இப்பவே சொல்றேன்...''

''உங்க நம்பிக்கை ஒரு பக்கம் இருக்கட்டும். நான் சொல்றத ஒரு தடவை கேட்டுத்தான் பாருங்களேன்...''

''சரிம்மா... சொல்லுங்க...'' - ஞானசுந்தரம் தயாரானார். டாக்டர் ஷர்மிளாவும் விளக்கத் தொடங்கினாள்!

## 'அமுதம்' ஆபீஸ்!

நெட்டில் மெயில் பாக்ஸில் எதாவது செய்தி இருக்கிறதா என்று பார்த்தபடி இருந்தாள் அகிலா. பக்கத்திலேயே ஜான்சன்.

''என்ன மேடம்... அடிக்கடி மெயில் பாக்ஸை ஓபன் பண்ணிப் பண்ணி பாக்குறீங்க... நேரம் வேற நெருங்கிக் கிட்டே இருக்கு. அநாமதேயமா எதாவது ஸ்கூப் நியூஸ் வராதான்னு துடிக்கிற மாதிரி தெரியுதே...''

''ஆமாம் ஜான்சன்... இன்னிக்கு நைட் 12 மணிக்குத் தானே அந்த மறு பிறவி விஷயம் நடக்கப் போகுது?''

''என்ன மேடம்... நீங்களும் அந்த செய்தியை நம்பத் தொடங்கிட்டீங்களா...?''

''ஒரு வேளை 12 மணிக்கு பெண் குழந்தை பிறந்து அது உண்மையாயிட்டா...?''

''என்ன மேடம் நீங்க... குழந்தை 12 மணிக்கு பிறக்கப் போறதை லைவ்வா வா காட்டப் போறாங்க - அதை நாம நம்ப? சிசேரியன் பண்ணி குழந்தையை எடுத்துட்டு 12 மணிக்குத் தான் பொறந்ததுன்னு ஊர் உலகத்துக்கு பொய் கூட சொல்லலாம் தானே?''

''நீ சொல்றதுக்கும் சான்ஸ் இருக்கு... ஏது எப்படியோ இந்த விஷயத்துல இறங்குனதுல ஒரு நாலு திருட்டுக் கொலைகாரங்களப் பத்தி தெரிஞ்சுக்க முடிஞ்சது. அவங்க சிக்கினாலே அது நமக்குப் பெரிய வெற்றிதானே?''

''ஒரு பத்திரிகையாளனா நான் என் கடமையை சரியா செய்து முடிச்சிட்டேன். நீங்களும் போலீஸ் வரை கொண்டு போய் தூங்கிக் கிட்டிருந்த அவ்வளவு பேரையும் எழுப்பியும் விட்டுட்டீங்க. இந்த நிமிஷம் வரை சில நல்லவைகளுக்காக சாமர்த்யமாவே தான் நடந்துகிட்டே போறோம்.

இதுக்கெல்லாம் ஒரு பதில் இன்னிக்கு இரவு தெரிய வருதா - இல்லை காலைல பொழுது விடியும் போது எதிரிகள் புத்திசாலிகள்னு தெரிய வருதாங்கறதுதான் இப்ப நம்ம முன்னால உள்ள கேள்வி...''

- ஜான்சன் கருத்தை ரசித்தாள். அகிலா. கை கெடிகாரத்தைப் பார்த்தாள். மணி சரியாக எட்டு!

''ஜான்சன்...! அந்தம்மா இப்ப வீட்ல இருப்பாங்களா இல்லை ஹாஸ்பிட்டல்ல அட்மிட் ஆகியிருப்பாங்களா?''

''நான் இப்ப ஆஸ்பத்திரிக்கு புறப்பட்டுகிட்டு இருக்கேன். நூறு பர்சண்ட் அவங்க டாக்டர் ஷர்மிளா கிளினிக்லதான் அட்மிட் ஆகணும். ஏன்னா அவங்கதான் இவங்க கர்ப்பம் தரிக்கவே உதவி செய்தவங்க...''

''சரி... நீ புறப்படு... ஹாஸ்பிட்டல்ல நடக்கற விஷயங்கள எனக்கு சொல்லிகிட்டே இரு. குறிப்பா 12 மணிக்கு குழந்தை தானா பிறக்குதா இல்லை



ஆபரேஷன் பண்ணியான்னு நமக்குத் தெளிவா தெரியணும்...''

''இங்கையே இப்பவே சொல்றேன் மேடம்... தானால்லாம் பிறக்க வாய்ப்பே இல்லை. அது அந்த பூர்வஜென்மம்ங்ற விஷயம் உண்மையா இருந்தா தான் சாத்யம். ஆகையால ஆபரேஷன் பண்ணித் தான் குழந்தையை எடுப்பாங்க.

அதை நீங்க இப்பவே இங்கேயே எழுதிக்கலாம்... என்னைப் போல இந்த விஷயத்துல நடக்கப் போறதத் தெரிஞ்சுக்க அநேகமா மத்த பத்திரிகைகள்ல இருந்தும் ஆட்கள் வந்து காத்துக்கிட்டிருக்கலாம்... யார் வந்தாலும் வராட்டியும் அந்த கொலைகாரங்க நிச்சயம் அங்க வருவாங்கன்னு நான் உறுதியா நம்பறேன்.''

''இல்லை... அவங்க வரமாட்டாங்க. அவங்க சார்பா யாராவது வந்து வேவு பாக்கலாம்னுதான் நான் யூகிக்கறேன்.''

- ஜான்சனும் அகிலாவும் தங்களுக்குள் உரசி முடித்துக் கொண்ட நிலையில் ஜான்சன் கிளம்பினான்.

## 9

'அறிவின் எந்த முனைக்கும் அகப்படாமல் வழுக்கியோடி இன்றும் புதிருக்கெல்லாம் புதிராக விளங்கிடும் விஷயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. குறிப்பாக இப்படிப் புதிராக உள்ள விஷயங்கள் இங்கே என்று இல்லை. மேலை நாடுகளிலும் மிக அதிகம் உள்ளது. அதில் ஒன்று விண்ணில் இருந்து பறக்கும் தட்டுகள் பறந்து வந்து நமது மண்ணில் இறங்கி விட்டு அதை ஒரு சிலர் மட்டுமே பார்த்த நிலையில் அது வானில் எழும்பி மறைந்து போனதுதான்... ஒரு முற்றின வயல் வெளியில் அது இறங்கிய தடயங்கள்

பார்ப்பதற்கு நம்மை அதிசயப் பட வைக்கின்றன... இது ஒரு உதாரணம்தான்! நமது இமயமலைத் தொடர் வரிசையிலேயே ஒரு இடத்தில் மேலே, குளிரும் பனிக்கட்டிகள் குவிந்து கிடக்க - கீழே, கொதிக்கும் வெந்நீர் ஊற்று அடங்காத தன்மையோடும் இன்றும் பொங்கி வந்து கொண்டுதான் உள்ளது. இப்படி நம்பமுடியாத ஆனால் நிதர்சனமான விஷயங்களும் இருக்கவே செய்கின்றன!'

**மா**ம்பாக்கத்துக்குள் அப்பொழுதுதான் பாக்ய லட்சுமி மேல் பீரோ விழுந்த விஷயமே பரவியபடி இருந்தது. ஆளுக்கு ஆள் பரிதாபத்துடன் கூடிக்கூடி பேச ஆரம்பித்து விட்டனர். ஊருக்கு நடுவில் உள்ள ஆலமரத்தடி பஞ்சாயத்து திண்ணையில் ஒரு போர்டு வைத்து அதில் '**சண்டபேரி அம்மன் கோபம் காரணமாக நடக்கக் கூடாததெல்லாம் நடந்து வருகிறது. எனவே ஊர்க் கட்டுப்பாடு காத்து வெளியூர்க்காரர்கள் யார் வந்து எதைக் கேட்டாலும் மௌனம் சாதித்து ஊரின் நிம்மதியைப் பாதுகாக்க வேண்டும்.**' என்று எழுதப் பட்டிருந்தது.

ஞானசுந்தரமும் டாக்டர் சொன்னதை எல்லாம் மனதுக்குள் அசை போட்டபடியே வீட்டிற்குள் நுழைந்திருந்தார். வீட்டு வேலைக்காரர்கள் அவ்வளவு பேரும் அவரைக் கொத்தாக சூழ்ந்து கொண்டனர்.

ஞானசுந்தரம் மிக இறுக்கமான மௌனத்தில் இருந்தார். ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியவர் இங்கே எதற்கு வந்தார் என்கிற கேள்வி நெற்றியில் குறுகுறுத்தாலும் அதைக் கேட்கும் தைரியம் அங்கே யாருக்கும் இல்லை. சட்டென்று உடம்பை சிலுப்பிக் கொண்டு வேலு என்கிற வேலைக்காரன் மட்டும் கேட்டான்.

''ஐயா... என்னங்கய்யா நீங்க பாட்டும் வந்து எதுவும் பேசாம இருக்கீங்க... அம்மாக்கு



ப்படிங்கய்யா இருக்கு?'' - இப்படி ஒருவன் கேட்க ாட்டானா என்று காத்திருந்தவர் போல அவனைப் ார்த்தார் ஞான சுந்தரம்.

''ஐயா...''

''எல்லாம் முடிஞ்சிருச்சிடா வேலு... வவுத்துப் ிள்ளையும் போய் பாக்கியமும் போற நிலைலதான் ிருக்கா...''

''ஐயா...''

''ஊஹூம்... என்னபேசியும் இனி பிரயோஜன ில்ல. சண்டபேரி ஆத்தா விஷயத்துல தப்புக்கு ிமல தப்பா நடந்துருச்சி.''

''என்னய்யா சொல்றீங்க...? புரியலீங்களே...?''

''பாக்யம் பெரிய தப்பு பண்ணிட்டா... ாக்டரம்மா பேச்சைக் கேட்டுகிட்டு சங்கரியை பாரோ கொன்னுட்டதால்லாம் நினைச்சிட்டா. ஆனா ஆத்தாதான் சங்கரியை தனக்கு வேணும்னு கூட்டி ிட்டிருக்கா. அவ விதிச்ச கட்டுப்பாட்டை மீறி ங்கரி எதுக்கு கோவில் பக்கம் போனா?

ஆத்தா என்ன சாந்தமான சாமியா... துடியான பத்ரகாளி அம்சம் ஆச்சே... அதான் அள்ளி ிழுங்கிட்டா. அது புரியாம இன்னொரு பிள்ளை... அவளைக்கொண்டு பழிக்குப் பழின்னு இவ ஆசைப்பட்டதெல்லாம் எதுவும் நடக்கலை. அதான் ீரோ ரூபத்துல வந்து பாக்கிய லட்சுமிக்குப் பாடம் கத்துக் கொடுத்துட்டா...''

''என்னய்யா இது... நீங்களா இப்படிப் பேசறது? ாதை வெச்சுய்யா சாமிதான் காரணம்னு சொல்றீங்க?''

''நடந்ததை வெச்சுதான்... அது எவ்வளவு பெரிய பீரோ...! அது அப்படியே புரண்டு ிழுதுன்னா அது ஆத்தா சக்தி இல்லாம வேற ன்ன? நான் இப்ப கார்ல வரும் போது முக்கு புளிய மரம் கிட்ட கையில திரி சூலத்தோட அவ நின்னு ிரிச்சதைப் பார்த்தேனே...!''

''ஐயா... நெசமாவா சொல்றீங்க?''

''உனக்கு தைரியம் இருந்தா நீ போய்ப்பார்... அவ ிக்கறது தெரியும். இப்ப அவ கோயில்லையே இல்லை. நம்ம ஊருக்குள்ளயே வந்துட்டா. ன்னைக் கேட்டா அவளுக்காக எவ்வளவு பலி



வேணும்னாலும் தரலாம். அப்பதான் அவ சந்தோஷப்பட்டு கோவில்லயே இருப்பா... அவ இப்படி ஊருக்குள்ள வந்தா யாரால தாங்க முடியும்? நாளைக்கே பார் நம்ம ஊர் பிள்ளைங்களுக்கு அம்மை வாரித் தெறிக்கப் போவுது... அங்கங்க குடிசைங்க பத்தி எரியும் பார். மழையும் சுத்தமா பெய்யாம போய் ஊரே பஞ்சத்துல மாட்டிகிட்டு அழியப் போவுது பார்..."

- ஞானசுந்தரம் இயல்பாகப் பேசுகிறாரா இல்லை எல்லாம் டாக்டர் ஷர்மிளாவின் ஐடியாவா என்பதை எல்லாம் அங்கே அவர் பேசும் போது உணரவே முடியவில்லை.

வேலைக்காரர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களில் மொட்டச்சி என்று ஒருத்தி. இத்தனைக்கும் அவளுக்கு சடை பிடித்த தலை. அவள் பெரும்பாலும் யாருடனும் எதுவுமே பேசமாட்டாள். மீறிப் பேசினாலும் திக்கும். எனவே அவளிடம் மற்றவர்களுக்கும் பெரிய எதிர்பார்ப்பெல்லாம் இல்லை. அவள் மட்டும் ஞானசுந்தரம் பேசியதை முழுமையாக கிரகித்தது போல இருந்தாள்.

"சரி சரி போங்க... போய் வேலையப் பாருங்க. பொழுது விடியட்டும். நல்லது காதுல உழுவுதா... இல்ல கெட்ட சேதி காதுல உழுவுதான்னு பாப்போம்..."

- ஒரு விரக்தியான பதிலோடு எழுந்து அவரது அறையை நோக்கிச் சென்று கதவையும் தாழிட்டுக் கொண்டார்.

வேலு வாய் விடத் தொடங்கினான்.

"நேத்து இந்நேரம் நான் நினைச்சது ஒண்ணு... இன்னிக்கு நடந்தது இன்னொண்ணு. ஐயா ரொம்பவே உடைஞ்சி போய்ட்டாரு... ஆத்தாளுக்கு இருக்கற சக்தியைப் பத்தி இப்பதான் எனக்கே தெரியுது..." என்றபடியே அவனும் விலகினான். மற்றவர்களும் அந்தப் பெரிய வீட்டு பின்புறம் உள்ள கொட்டடிக்குப் போய் படுக்கத் தயாரானார்கள். அவர்களில் ஒருவன் வேப்பமரக் கிளை ஒன்றை ஒடித்து வந்து சத்தை சருகுகளுக்குத் தீவைத்து அதில் வேப்பிலைகளையும் போட்டான். புகை



ண்டெழுந்தது! நல்ல அடர்வான புகை! அந்த கைக்குதான் கொசு மண்டாது.

காய்ந்த வைக்கோலை அடைத்து மெத்தை போல ருவாக்கியிருந்தான். ஏராளமான சினிமா போஸ்டர் ர்தான் தரை விரிப்பு. மட்டமான கோலிபல்ப் வளிச்சத்துக்கு இடையில் வைக்கோல் மெத்தை மல் போய் படுத்தான்.

சில் வண்டுகள் காதைத் திருகுவது போல ங்கார மிட்டுக் கொண்டிருந்தன. ஊடே சிலர் கயில் ஏனத்துடன் கழிப்புக்கு ஒதுங்கத் தாடங்கினர். மொட்டச்சியும் அவர்களில் ஒருத்தி க இருந்தாள். அவள் கையில் ஒரு நசுங்கிப் போன லுமினிய ஏனம். மாடுகளுக்கு கழனி மொண்டு த்தப் பயன்படுவது அது. அத்துடன் அவள் ழிப்புக்கு ஒதுங்குவது போல மெல்ல வேறு புறம் செல்லத் தொடங்கினாள்.

தனி அறைக்குள் நுழைந்து கதவைத் தாழ் போடுவது போல் போட்டுக் கொண்ட ஞானசுந்தரம், மெல்ல வெளியே வந்து மொட்டை மாடி மேல் வந்து நின்று கொண்டிருந்தார். இருளில் அவர் இருப்பது தெரியவில்லை. ஆனால் அவருக்கு மாட்டுக் கொட்டார நடப்பு அவ்வளவும் கண்ணில் பட்டபடி இருந்தது. அந்த வேளையில் ஒருவன் தூக்குவாளியைப் பாத்திரமாகப் பிடித்துக் கொண்டு பசுமாடு ஒன்றின் மடியில் பால் பீய்ச்சிக் கொண்டிருந்தான்.

பண்ணை வேலையாட்களே ஒரு மாதிரிதான்!

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமான செயல்பாடுகள். ஒருவன் இப்படி இருட்டில் பால் கறந்தால், ஒருவன் வயலில் நெற்கதிர் திருடுவான். மையற் கட்டில் உப்பு புளி எல்லாம் கூட அவ்வப் பொழுது காணாமல் போகும். கையும் களவுமாகப் பிடித்து நிறுத்தினாலோ 'எல்லாம் இந்த ஒரு சாண் வயித்தை கழுவத்தான்யா' என்று பல்லவி பாடுவார்கள். ஞானசுந்தரத்துக்கு அந்த டென் னான சூழலிலும் அதெல்லாம் நினைவில் தோன்றியது. ஓரளவுக்கு மேல் மொட்டை மாடியில் இருந்தும் பார்க்க முடியவில்லை.



சர்ப்ரைஸாகக் கீழே கொட்டாரத்துக்கே போய் பார்த்துவிடும் ஒரு எண்ணம் எழும்பவும் ஓசையின்றி கீழ் இறங்கத் தொடங்கினார். பூனை போல நடந்து கொட்டாரம் பக்கமாகவும் வந்தார். அவர் வந்து நிற்பதை திருட்டும் பால் கறந்தவன் பார்த்துவிட்டுவெளிறிப் போனான். அதேபோல கழிப்புக்காக ஒதுங்கியவர்களும் கையில் ஏனங்களுடன் திரும்பி வந்து நின்றனர்.

எல்லோரையும் ஆழமாக ஊடுருவத் தொடங்கினார்.

''என்னய்யா... தூக்கம் வரலீங்களா - மாட்டுக் கொட்டாரத்துக்கே வந்து நிக்கிறீங்களே?'' - என்று வேலு மட்டும் ஆரம்பித்தான். அவர் பார்வை அவர்கள் ஒவ்வொருவரையும் குடைவது போலப் பார்த்தது. அவர்களில் மொட்டச்சி இல்லாததையும் உணர்ந்து கொண்டார்.

''எங்கடா மொட்டச்சி?'' - மிகக் கீழிறங்கிய குரலில் கேட்கவும் செய்தார். அப்போதுதான் அவர்களே அவள் இல்லாததை உணர்ந்து தங்களுக்குள் பார்த்துக் கொண்டனர். ஒருத்தி மட்டும் ''அதுக்கு இப்பல்லாம் ராவானா தூக்கமே வர்றதில்லீங்க... கோடாங்கி வீட்டுக்கு போய் விபூதி போட்டுகிட்டு வந்த பிறகுதான் தூக்கமே வருது. இப்ப கூட கோடாங்கி வீட்டுக்குத்தான் போயிருப்பா...'' என்றாள். பாடம் போடவும், மந்திரிக்கவும் ஊருக்கு ஒரு கோடாங்கி இருப்பார்கள்... சில ஊர் கோடாங்கிகள் பேய் கூட ஒட்டுவார்கள். மாம்பாக்கம் கோடாங்கிதான் சண்டபேரி அம்மன் கோவிலுக்கும் பூசாரி... ஞானசுந்தரத்துக்கும் அந்த பெண் பதில் சுர் என்றது. அப்படியே அங்கிருந்த படியே கோடாங்கி வீடு நோக்கி நடக்கத் தொடங்கிவிட்டார்.

அவர்களுக்குள் லேசான அதிர்வு பின்னல் போட்டுப் புரண்டது.

''ஐயாவோட பேச்சு நடவடிக்கை எல்லாமே ஒரு தினுசா இருக்குது. அம்மா ஆஸ்பத்திரில கிடக்கைல இங்க இவர் இப்படி நம்மை நோட்டம் உட்றதுல ஏதோ இருக்கு...'' என்று முணு முணுக்க ஆரம்பித்தனர்!



கிராமங்களில் பார்த்துப் பார்த்து பெயர் வைத்த டங்கள் என்று எதுவும் கிடையாது. அங்கெல் ாமே காரணப் பெயர்தான். வடக்குத்தெரு, ளத்தங்கரை தெரு, கூத்துக்காரன் தெரு, கோயில் மடு என்றுதான் பெயர்கள்! இதில் கூத்துக்காரன் தெருவில் இருந்தது கோடாங்கி பூசாரியின் வீடு. ீட்டுக் கூரை முழுக்க கரைக்குடுக்கை... ுன்னாலே வேப்பமரம். மரத்துக்குக் கீழே விபூதி போடத் தோதாகக் கட்டப்பட்ட திண்ணை. பூசாரி இரவில் கூட அதன் மேல் படுத்துக்கிடப்பார். ஞானசுந்தரம் போன போதும் படுத்துத்தான் கிடந்தார். அதுவே மொட்டச்சி அங்கே அவரைப் பார்க்க வரவில்லை என்பதைச் சொல்லி விட்டது. கைக் கெடிகாரத்தை பார்த்தார். மணி 11 ஐ நெருங்கிக் கொண்டிருந்தது. ஜிப்பா பாக்கெட்டில் வைப்ரேஷன் மோடில் போட்டிருந்த செல்போன் உதறியது. கையில் எடுத்துப் பார்த்தார். டாக்டர் ஷர்மிளா தான் அழைத்திருந்தாள்.

ஆச்சரியப்படும் விதமாய் பூசாரி வீட்டுக்கு வெளியே டவர் கிடைத்ததுதான் இங்கே சிறப்பு.

''மிஸ்டர் ஞானசுந்தரம்! எங்க இருக்கீங்க? நான் சொன்ன மாதிரியேதானே நடந்துகிட்டிருக்கீங்க...''

''ஆமாம் டாக்டரம்மா... உங்க கணிப்பை தப்புன்னு சொல்ல முடியாது. மொட்டச்சின்னு ஒரு வேலைக்காரி சந்தேகப் பட்ற மாதிரி நடந்துகிட்டிருக்கா... அவளைத் தேடித்தான் இப்ப ஊருக்குள்ள சுத்திக் கிட்டிருக்கேன்...''

''சரியான திசைலதான் போய்க் கிட்டிருக்கீங்க... உங்களுக்கு ஒரு சந்தோஷமான விஷயம்!''

''என்ன டாக்டரம்மா...? ஆபரேஷன் நல்லபடி நடந்து வயித்துல இருந்து குழந்தையோட பொணத்தை எடுத்துட்டீங்களா...? பாக்யம் பொழைச்சிட்டாளா?''

''அதுதான் இல்லை... உள்ற இருக்கற குழந்தைக்கு உயிர் இருக்கற மாதிரி தெரியுது. சாயந்தரம் வந்தப்போ பார்த்த ஸ்கேனுக்கும் இப்ப பாக்கற ஸ்கேனுக்கும் பயங்கர வித்யாசம். உள்ற குழந்தை



கிட்ட அசைவு தெரியுது. உங்க மனைவி உடம்புலையும் நம்ப முடியாத அளவு மாற்றங்கள். ஒரு சுமங்கலிப் பொண்ணு தேடி வந்து ரத்தம் கொடுத்துச்சு. அந்தப் பொண்ணு மஞ்ச சேலை உடுத்தி சக்தி விரதம் இருக்கறதா சொன்னிச்சு. அந்த ரத்தம் கொடுத்த பிறகு தான் இந்த மாற்றமே...''

''என்னம்மா சொல்றீங்க... எனக்கு இப்பவே சந்தோஷத்துல படபடக்குதும்மா... எனக்கு சோர்வு வந்துடக் கூடாதுன்னு புத்திசாலித்தனமா பேசறதா நினைச்சு பொய்ய மட்டும் சொல்லிடாதீங்கம்மா....''

''சத்யமா இல்லை. அவ்வளவு ஏன்? உங்களுக்குத் தகவல் சொல்ல போன் பண்ணினேன். உடனே நீங்க எடுத்து பேசறீங்க. நஷர்மலா உங்க ஊருக்கு எனக்கு லைனே கிடைக்காதே... வீட்டுல லேண்ட் லைன்ல தானே பேசுவேன்?''

''ஆமாம்மா... ஆமாம்மா...''

''நீங்க, நான் சொன்ன மாதிரியே போங்க. நாம சந்தேகப்பட்டது சரிதான்னா எனக்கு உடனே ஒரு போன் பண்றதவிட உங்க ஊர் போலீசுக்கு நேரா போயிடுங்க. அதுதான் முக்கியம். இப்ப இங்க என்னைப் பார்க்கவந்த ஒரு போலீஸ் ஆபீசர் நீங்க எங்கன்னு என்கிட்ட கேட்டார். நான் அவர்கிட்ட நாம எடுத்த முடிவை சொன்னேன். 'எங்க வேலையை நீங்க எதுக்கு பாக்கறீங்க? சாருக்கு தகவல் கொடுத்து எங்களோட ஒத்துழைக்கச் சொல்லுங்க. ஊர் பூரா போலீஸ்காரங்க வேற வேற வேஷம் போட்டு சுத்திக் கிட்டிருக்காங்க'ன்னு சொன்னாரு...''

''அப்படியா சங்சதி... சரிம்மா... நான் பாத்துக்கறேன். எனக்கு இப்ப ஆயிரம் யானை பலம் வந்த மாதிரி இருக்கு. ரத்தம் கொடுக்க வந்த அந்த பொண்ணையும் அங்கையே இருக்கச் சொல்லுங்க. அவங்களுக்கு நான் எதாவது செய்யணும்...''

''அவங்க இங்கதான் இருக்காங்க... நீங்க ஜாக்ரதையா செயல்படுங்க... நான் கொஞ்ச நேரம் கழிச்சு தொடர்பு கொள்றேன்...''

- டாக்டர் ஷர்மிளாவின் செய்தி ஞானசுந்தரத்திடம் நிஜமாலுமே ஆயிரம் யானை பலத்தை



உருவாக்கியிருந்தது. அதே சமயம் எதிரில் ஒரு உருவம் சிலை போல நடந்து வந்தபடி இருந்தது. இருளில் • சரியாகத் தெரியாத நிலையில் ஞானசுந்தரம் அருகில் சென்று 'யாரது?' என்று கேட்டும் அதனிடம் பதிலில்லை. நடையும் நிற்கவில்லை.

சந்தேகம் வலுக்கவும் வேகமாக அந்த உருவத்தை நெருங்கி தோளைத் தொட்டவருக்கு பகீர் என்றது. மொட்டச்சி அவரை ஏதோ ஒரு புதியவரைப் பார்ப்பது போல பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் நெற்றியில் குங்குமமும் ரத்தமும் தோய்ந்த பொட்டு!

''ஏ மொட்ட... என்ன புள்ள இது? எங்க போய்ட்டு வரே?'' - ஞான சுந்தரம் புளியங்கொம்பை உலுக்குவது போல உலுக்கினார்.

ஆனால் அவள் இமைக்காமல் வெறித்தபடியே இருந்தாள். ஓங்கி ஒரு அறை விட்டார். காதில் வண்டு பறக்கும் அளவுக்கான அறை... அதன் பிறகு தான் லேசாக அவளுக்கு பிரக்ஞை திரும்ப ஆரம்பித்தது. மலங்க மலங்க விழித்தவள் திரும்ப ஞானசுந்தரம் அறையவும் ''ஐயா... நீ... நீ... நீங்களா?'' என்று அவரையும் தன் பாணியில் அடையாளம் கண்டு கொண்டு கேட்டாள்.

''என்ன நானா... இந்த ராத்திரி நேரத்துல எங்க போய்ட்டு வரே?.''

''அது... அது...''

கிராமத்து வெளியில் பூசாரி வீட்டுக்கு சிறிது தொலைவில் அவர் கேட்டது - பூசாரி காதிலும் விழுந்து அவரும் விழித்துக் கொண்டார்.

ஞானசுந்தரம் அவளைத் தொடர்ந்த தூண்டவும் ஒவ்வொருவராக அவரைச் சுற்றி ஊர்க் கூட்டம் கூடி விட்டது. அதில் மாறுவேஷப் போலீஸ்காரர்கள் சிலரும் இருந்தனர்.

''ஐயா...! என்னங்க இது... அம்மாவோட நீங்க ஆஸ்பத்திரில இருக்கறதா சொன்னாங்க. ஆனா நீங்க இங்க இருக்கீங்களே...!''

''ஐயா...! என்னய்யா நடக்குது...? ஏன் இந்த மொட்டச்சி இந்த முழி முழிக்கறா?''

- ஒவ்வொருவரும் ஒவ்வொரு கேள்வி கேட்க - மொட்டச்சி அழ ஆரம்பித்து விட்டாள்.

''ஏ புள்ள... என்ன நடந்துச்சு சொல்லு...''



''அது... அது...''

''பயப்படாம தைரியமா சொல்லு.''

''எனக்கு எதுவும் தெரியாதுய்யா... ஒ... ஒ... ஒரு நா நான் வயக்காட்டுப் பக்கம் போ... போ... போனப்ப ஒரு சாமியார் என்னைக் கூப்பிட்டு விசாரிச்சார். நான் உங்க வீட்டுல வேலை செய்யறத தெரிஞ்சிகிட்டு என் தலைமுடில கொஞ்சம் முடியை வெட்டி எடுத்துக்கிட்டாரு. அதுக்குப் பிறகு ராத்திரியானா நான் தூங்கி கிட்டு இருக்கும் போது எழுந்திரிச்க போயிடுவேன். அப்புறம் வந்து படுத்துடு வேன். போன இடத்துல என்ன நடக்குது ஏது நடக்குதுன்னு எதுவுமே எனக்குத் தெரியாதுங்க...''

''இவ்வளவு தூரம் சொல்லத் தெரியும்.., ஆனா எங்க போனே என்ன பண்ணேன்னு தெரியாதா?''

''நான் கடுகாட்டு வாசல் வரைக்கும் போறது மட்டும்தான் ஞாபகம் இருக்கு... அதுக்கு மேல ச... ச... சத்யமா எதுவுமே ஞாபகத்துக்கு வர மாட்டேங்குது...''

- மொட்டச்சி அந்த பதிலோடு சரசரவென்று அழுதாள். பூசாரி உடனேயே கையை சொடக்கினார்.

''ஐயா... இதை வசியப்படுத்தி ஏதோ தில்லு முல்லு நடந்திருக்கு. சுடுகாடுன்னு இது சொல்றதப் பார்த்தா நிச்சயம் இது பில்லி ஏவல் சமாச்சாரம் தான்.

அதோட இன்னிக்கு ஒரு விசேஷம் இருக்குதுங்க. அதாவது வானத்துல ஏழு கிரகங்களும் ஒரே நேர் கோட்டுல வருது... இந்த மாதிரி நேரத்துல இந்த மாந்திரீகம் பண்றவங்க பூசை பலின்னு எதாவது கூத்தடிப்பாங்க...'' என்று ஒரு முன்னோட்டம் தந்தவர், ''வாங்க... சுடுகாட்டுப் பக்கம் போய் பார்ப்போம்.'' என்றார்.

## 10

''எந்த ஒரு விஷயத்துக்கும் பின்னால் கால நேரச் சிறப்பு என்று ஒன்று உள்ளது. அந்த கால நேரத்துக்கு தகுந்தாற் போல நாம் மூச்சு விடுவதில் மாற்றங்கள்



நிகழ்கிறது என்பதுதான் நுட்பமான உண்மை. வீட்டுக்குள் ஒரு மனிதன் இயல்பாக மூச்சு விடுவதற்கும் வீதியில் இறங்கி நடக்கும் போது மூச்சு விடுவதற்கும் நிறையவே வித்தியாசம் உள்ளது.

எல்லா இடத்திலும் காற்று இருந்தாலும் அது இடத்திற்கு இடம் மாறுபட்ட அழுத்தத்துடன் காணப்படுகிறது. நாம் உள் வாங்கும் போது அது அந்த அழுத்தத்துடன் மட்டுமில்லை - அவ்வேளையில் நிலவும் நட்சத்திர ஹோரை மற்றும் கிரகக் கதிர் வீச்சுக்கு தகுந்தாற் போல் அதனுள் கதிர்கள் உள்ளிருந்து நாம் அதையும் சேர்த்தே உள்ளிழுக்கிறோம்; வெளிவிடுகிறோம். இந்த சூட்சமமான விஷயத்துக்கும் நம் மனதிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஏன் என்றால் அதுதான் யோசிக்கிறது. 'இந்த மாதிரி சிந்தனையே தவறானது; எல்லாம் நாம் நினைப்பதில் மட்டும்தான் உள்ளது' என்று இந்த சூட்சமங்களை ஒருவர் மறுத்துப் பேசுவதற்குப் பின்னால் கூட இதுவே உள்ளது.

வாழ்க்கையை விளங்கிக் கொள்ள விழைபவர்கள் இதை விளங்கிக் கொள்வதில்தான் அவர்களுக்கான ஞான பாடம் ஆரம்பமாகிறது!''

அந்த ஊர்ச் சுடுகாடு ஊருக்கு தெற்கில் காய்ந்து போன ஆறு ஒன்றின் கரையோரமாக ஏராளமான காட்டுமரக் கூட்டங்களுக்கு நடுவில் இருந்தது. சாதாரணமாக அந்தப் பக்கம் ஊர்க்காரர்கள் யாரும் போகவே பயப்படும் ரகமாகத்தான் இருந்தது.

வீட்டில் வளர்க்கப்படும் கோழிகளை பல சமயங்கள் நரிகள் வந்து கவ்விக் கொண்டு போய் விடும். அந்த நரிகள் அடைந்து கிடப்பதும் சுடுகாட்டில்தான் என்பது ஊரின் கணிப்பு. எனவே அந்த ஊர் சுடுகாட்டின் மேல் ஒரு கூடுதல் பயமும் இருப்பதால் நடமாட்டமில்லாத அந்த இடம் நோக்கி அந்த

இரவில் ஒரு கூட்டம் போய்க் கொண்டிருந்தது.

காய்ந்த ஆற்றின் மறுகரையில் சுடுகாடு.

இந்தப் பக்கத்தில் ஒரு வேன் புறப்பட்டுக் கொண்டிருந்தது.

ஒரு கூட்டம் திரண்டு வருவதைப் பார்க்கவும் வேன் புறப்படத் தொடங்கி விட்டது. கூட்டம் வரும் பாதையில் தான் அதுவும் எதிர்த்துச் சென்றாக வேண்டும். வேனும் அசுர வேகம் எடுத்து எல்லோர் மேலும் மோதுவது போல வரவும் ஆளுக்கு ஆள் சிதறினார்கள். வேன் அவர்களைக் கடந்து ஓடத் தொடங்கியது. சிதறி விழுந்தவர்களில் ஒருவர் துள்ளி எழுந்து தன் இடுப்பில் இருக்கும் வாக்கி டாக்கியில் யாருக்கோ ஏதோ சமிக்ஞை கொடுக்க ஆரம்பித்தார். அப்பொழுது தான் பூசாரிக்கே அவர் போலீஸ்காரர் என்பது தெரிந்தது.

''அடி ஆத்தி... என்னய்யா இது நம்பள சுத்தி நமக்கே தெரியாம என்னென்னமோ நடந்துகிட்டிருக்குது... நான் கூட இந்த ஆளை வாத்து வாங்க வந்த நாகலாபுரத்துக் காரன்னுல்ல நினைச்சேன்...'' என்று முணுமுணுக்க - அந்த போலீஸ்காரர் ''வாய மூடுங்க... உள்ற பாருங்க. வேன்ல போனவங்கள ஊருக்குள்ள இருக்கற எங்க ஆட்கள் மடக்கிடுவாங்க. உள்ற ஒரு கூட்டம் இருக்கு... அவங்க தப்பிச்சுடக் கூடாது...'' என்றார்.

உள்ளேயும் ஒரே புதர்!

சில நாட்களாகப் பெய்த மழைக்கு சுடுகாட்டுப் புதர்களிடம்தான் நல்ல தெளிவு. ஊடே மெல்லிய புகை கிளம்பி சுடுகாடு முழுக்க ஏதோ பாலிதீன் துணியால் மூடியது போல காட்சி தந்தது.

கடந்து கடந்து உள்ளே நுழையவும் - தகன மேடைக்கு முன் உள்ள பெரிய எட்டி மரம் கண்ணில் பட்டது. அந்த மரத்தில் ஒரு தீப்பந்தம் கட்டப்பட்டு எரிந்து கொண்டிருக்க, அதன் வெளிச்சத்தில் பார்க்க முடிந்த விதத்தில் முக்கோணமாக மூன்று பெண்கள் கறுப்புச் சேலை கட்டி உட்கார வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு நடுவில் யாககுண்டம் போல ஒரு குண்டம். அந்த மூன்று பெண்களையும் நிர்வாண கோலத்தில் நான்கு பேர் வட்டமாய் சுற்றி வந்து வணங்கிக் கொண்டிருந்தனர்.



வெகு தூரத்தில் சுடுகாட்டுப் புலையன் கறுப்புப் போர்வையைப் போர்த்திக் கொண்டு ஒரு புழு போல சுருண்டு படுத்திருந்தான். அவனிடம் சுவாசம் மட்டும்தான் இருந்தது. நிர்வாணமாக சுற்றிச் சுற்றி வந்த அந்த நான்கு பேரில் ஒரு முகம் எட்டிப் பார்த்த அவ்வளவு பேருக்குமே நன்கு பரிச்சயமான முகமாக இருந்தது.

பூசாரி, ''அடப்பாவி... நம்ம தமிழ் வாத்யாரு'' என்று பதறியே விட்டார்!

**ஹா**ஸ்பிட்டல்!

பத்திரிகையாளர் கூட்டத்துக்கு நடுவில் மணி 12 ஐ நெருங்கிக் கொண்டிருந்தது. டென்ஷனோடு நகத்தைக் கடித்தபடியே கெடிகாரத்தை பார்த்துக் கொண்டிருந்த ஜான்சன். வயர்லெஸ் ஹியரிங்கை காது மடல் மேல் மாட்டியிருந்தான். மார்பில் சட்டைப் பாக்கெட்டில் கிடந்தது செல்போன்! அவனும் பேசியபடியே இருந்தான்.

''மேடம்... மணி பன்னெண்டாகப் போகுது. உள்ள அந்தம்மாவுக்கு பிரசவ வலி எடுத்திடுச்சு. **'12 மணிக்கு நான் வந்து பிறப்பேன்'**னு சங்கரி சொன்னது நடக்கறதுக்குத்தான் வாய்ப்பு அதிகம். இது சாதாரணமா நடந்தா கூட பரவாயில்லை. வயிற்றுல குழந்தை இறந்து போயிடிச்சுன்னு டாக்டர்கள் சொல்லிட்ட நிலைல அந்தக் குழந்தை திரும்ப உயிர் வந்து - அது பிறக்கவும் போகுதுன்னா இதை மிஸ்ட்ரின்னு தானே சொல்லணும்?

இந்த 9 ம் தேதி ராத்திரி 12 மணி சமாச்சாரத்தை - ஒரு எச்சரிக்கை பொய்யா தான் நாம இன்னிக்கு இரவு 10 மணி வரை நினைச்சுகிட்டிருந்தோம்.

குழந்தை பிறந்தா கூட அது சிசேரியன்ல நிகழ்த்தப்பட்ட ஒரு செயற்கையான விஷயமா தான் இருக்க முடியும்னுல்லாம் பேசினோம். நாம யாருமே இந்த மறு ஜென்மப் பொய்யை நம்பாம - நம்பினோம்னு வேணும்னா சொல்லலாம்.''

- ஜான்சன் அகிலாவுக்குத் தகவல் கொடுத்தபடி இருக்க - மணி 12 ஐயும் தொட்டு நிற்க - குழந்தை வீறிட்டு அலறும் சப்தமும் கேட்டது.

''மேடம்...! குழந்தை பிறந்திடிச்சு. சங்கரி பிறந்

துட்டா... ஒரு நம்ப முடியாத பொய் உண்மையாயிடிச்சு. இங்க டாக்டர்கள்ல இருந்து மீடியா உலகமே இன்ப அதிர்ச்சியில் இருக்காங்க. ஒரு பக்கம் விஞ்ஞானம் குழந்தையை உருவாக்கக் காரணமா இருந்தது. ஆனா உயிர் வந்தது அதனால இல்லை. ஏன்னா விஞ்ஞானக் குழந்தை வயித்துலையே செத்துப் போச்சு. இப்ப பிணத்துக்கு உயிர் வந்து குழந்தை பிறந்திருக்குன்னா அதுக்கு சங்கரியோட ஆத்மா தானே காரணமா இருக்க முடியும்?''

- ஜான்சன் துள்ளிக் குதித்தான். சில அதிசயங்களுக்கு சாட்சியாக இருக்கும்போது இப்படி எல்லாம் தான் நடந்து கொள்ளத் தோன்றும். அந்த ஆஸ்பத்திரி காரிடாரில் ஒரு ஜோதிடரும் வந்திருந்தார். அவர் வானத்தை நோக்கிக் கும்பிட்டார்.

''இன்னிக்கு பஞ்சாங்கக் கணக்குப்படி ஒரு அபூர்வமான நாள். எல்லா கிரகங்களும் ஒரு நேர் கோட்ல வரும் ஒரு நிகழ்ச்சி வான மண்டலத்துல நடக்குது. அது மிகச்சரியா 11.58 ல தொடங்கி 12.05 வரை ஏழு நிமிஷம் மட்டுமே நீடிக்குது. இந்த நேரத்துல பிறக்கற குழந்தைகளோட ஜாதகத்துல ராகு கேதுக்கள் தவிர மற்ற அவ்வளவு பேரும் ஒரு வீட்ல தான் இருப்பாங்க... கால சர்ப யோகமான நேரம் இது. இந்த நேரத்துல செய்யப்பட்ற பூஜை, அதுல வைக்கப் பட்ற வேண்டுகோள் எல்லாமே பலிக்கும்.'' என்று அவர் தன்பாணியில் பேசிக் கொண்டிருந்தார்.

அப்படியே ''பிறந்திருக்கறது அந்த அம்பாள்தான். பூலோகத்துல உள்ள உயிர்களைக் கடைத்தேற்ற சக்தி தான் இப்படி திருவிளையாடல் நிகழ்த்தும்...'' என்றும் பேசினார். நடுவில் ரத்ததானம் செய்த அந்த மஞ்சள் புடவைக்காரப் பெண் மாயமாகி விட்ட செய்தியும் அங்கே பரபரப்பாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்க அகிலா ஜான்சனை அழைத்து ''ஜான்சன்... இங்கே நடந்த அதிசயத்தை நீ சொல்லிட்டே.... மாம்பாக்கத்து அதிசயத்தை நான் சொல்றேன் கேட்டுக்கோ...'' என ஆரம்பித்தாள். ''அங்க நீ பார்த்த அந்த நாலு கொலைகார மாந்திரீகர்களையும் போலீஸ் வளைச்சுப்பிடிச்சிடிச்சு. அதுல ஒருத்தர் உள்ளூர் தமிழ் வாத்யாராம். **'தமிழ் வாத்யாரா இருந்து ஒரு சம்பாத்யமும் இல்லை. ஆகையால் சர்வ சக்தி படைச்ச சாமியார் ஆகிட்டா கோடிக் கணக்குல சம்பாதிக்கலாம்'**னு அவ



ருக்கு அவர் கூட்டாளிகள் உபதேசம் செய்து பிரெய்ன் வாஷ் பண்ணி அவரையும் கூட்டு சேர்த்துக் கிட்டிருக்காங்க. அவங்களும் இந்த ராத்திரியைத்தான் தேர்வு செய்து வெச்சிருந்திருக்காங்க... நீ சொன்ன அந்த கிரகங்கள் ஒண்ணு சேர்ற அதே காரணம் தான்! அவங்க தான் இந்த ஒன்பதாவது மாதம் தேதி ஒன்பதாம் நாள் ராத்திரி 12 மணி கணக்கையும் போட்டு தமிழ் வாத்யார் மூலமா ஞானசுந்தரம் சார் மனைவியான பாக்யலட்சுமி மனசுல புகுத்தியிருக்காங்க.

அதன்பிறகு அவங்களும் அதை பிடிச்சிகிட்டு பேசியிருக்காங்க...

இப்படி ஒரு விஷயத்தை சொல்லி எல்லாருடைய கவனமும் ஆஸ்பத்திரியில் இருக்கும் போது சண்டபேரி அம்மன் கோவில்ல தங்களுடைய பலி பூஜையை முடிச்சிட்டு கம்பி நீட்டிடணும்கறதுதான் அவங்க திட்டம். இதுக்கு உள்ளூர்காரர் தமிழ்வாத்யார் தண்டபாணியும் உடந்தை. இது போக வீட்டுல வேலை செய்யற ஒரு விவரமில்லாத பெண்ணையும் பயன்படுத்திகிட்டிருக்காங்க... அந்த பெண்தான் ஞானசுந்தரம் மனைவி பாக்யலட்சுமி மேல பீரோவைத் தள்ளி அவங்களக் கொல்லப் பார்த்தவங்க. அதுமட்டும் இல்ல... ஞானசுந்தரத்தோட மனநிலையையும் அந்த பெண்ணை வெச்சே தெரிஞ்சிகிட்டிருக்காங்க...''

- அகிலா சொல்லி நிறுத்த ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டான் ஜான்சன்.

''ஏய்... இந்த விஷயமே டோட்டலா பெக்கூலியரா இல்ல...?''

''நிச்சயமா... புரிஞ்சுக்க முடியாத பெரிய புதிரா இருக்கு இந்த விஷயம். ஒரு பக்கம் மூட நம்பிக்கையோட நடந்துக்க பார்த்தவங்க வசமா மாட்டிக் கிட்டாங்க. அதுக்கு காரணம் என்னோட இன்வெஸ்டிகேஷன்; நம்மோட பொறுப்புணர்ச்சி; அதனால போலீஸ்கிட்ட ஏற்பட்ட அலெர்ட்நெஸ் தான் காரணம். அதே சமயம் செத்துப்போன வயிற்றுப் பிண்டத்துக்கு உயிர் வருது. ஒரு மஞ்சப் புடவை காட்டின பெண் வந்து தேவைப் பட்ற அளவு ரத்தம் தர்றா... அதனால உலகத்தோட கவனத்தையே திசை திருப்பறதுக்காக சொல்லப் பட்ட ஒரு பொய் அப்படியே உண்மையாகுது... இதை எப்படி எடுத்துக்கறது மேடம்?''

-ஜான்சன் கேட்டான். எல்லோரும் குழந்தையைப் புகைப்படம் எடுக்க முயன்று கொண்டிருந்தார்கள். டாக்டர் ஷர்மிளா 'இப்போது வேண்டாம்' என்று விரட்டிக் கொண்டிருந்தாள்!

அந்த நள்ளிரவைக் கடந்து விட்ட வேளையில் அகிலாவுக்குத் தூக்கமே வரவில்லை. தன் கம்ப்யூட்டர் முன் அமர்ந்து தன் எண்ணங்களை அப்படியே திரையில் எழுதத் தொடங்கினாள்.

'அன்புள்ள சங்கரி... **'நீ வருவாய் என'** நான் துளி கூட நம்பவில்லை. வந்து விட்டாய். வந்தது நீதானா இல்லை உன் சகோதரியா என்கிற கேள்விக்குள் எல்லாம் நான் போக விரும்பவில்லை.

உன்னை வைத்து சில உண்மைகள் தெளிவாகிறது.

இன்னமும் நமது கிராமங்களில் சரியான அளவு விழிப்புணர்வு வளரவில்லை என்பதுதான் அது... அதே சமயம் தெய்வீகமான விஷயங்களின் பின்புலத்தையும் முட்டாள் தனமானது என்று ஒதுக்கி விடக் கூடாது என்பதும் தெரிகிறது.

உண்மையில் நீ யார்? சங்கரிதானா? அது நீ வளர வளரத் தெரியப் போகும் ஒரு உண்மை. இந்த உலகின் முன்னால் ஒரு புறம் நீ விஞ்ஞானக் குழந்தை; மறுபுறம் ஆதிசக்தி அம்சம். அதே சமயம் பிறந்து வந்து பழி வாங்கத் தேவையே இல்லாதபடி நீ இங்கே பிறக்கிறாய். அங்கே ஒரு கூட்டமே சுகப்படுகிறது. இந்தக் கணக்கை ஆங்கிலத்தில் Magical Maths என்பார்கள். அப்படித்தான் இருக்கிறது.

இந்த உலகில் இந்த மாதிரிதான் எவ்வளவு புதிர்கள்! நீயும் ஒரு அழகிய புதிர்!

புதிராகிய உன்னை நான் இனி தொடர்ந்து கொண்டே இருப்பேன். ஒரு பத்திரிகையாளராக மட்டுமல்ல... ஒரு சமுதாயத் தாக்கமும் தேடலும் உள்ள பெண்ணாகவும்...

என் முடிவு சரிதானே?'

- அகிலா தனக்குத்தானே கேள்வி பதில் என்று கீபோர்டை தட்டிக் கொண்டேயிருந்தாள். மின்திரையில் எழுத்துக்கள் வளர்ந்து கொண்டே போய்க் கொண்டிருந்தன!

**முற்றும்**



# விரிக்காத வலையில் விழுந்த புலிகள்



## இந்திரா சௌந்தர்ராஜன்




ஏழு பேர்!
ஏழு பேரென்றால் ஏழே பேர்...

சீனு
ஹமீது
கோபால்
ராகவன்
லாரன்ஸ்
பிருதிவிராஜ்
மௌலி...

- அத்தனை பேர் புருவமும் சுணங்கி இருந்தது. பரபரப்பான சிந்தனை தீயாட்டம் மூளையை சுட்டுக் கொண்டிருந்தது. இறுதியாய் ஒரு முடிவுக்கு வந்த தோரணையில் ஒருவரை ஒருவர் ஏறிட்டுக் கொண்டனர்.

''ஃபிரெண்ட்ஸ்... எனக்கும் ரொம்ப பயமா இருக்கு. நம்ம செயலை தப்புன்னு நெனைக்கறதால உருவாகற பயமில்ல இது. ஊசி காதுக்குள்ள ஒட்டகத்தை நுழைக்கற நம்ம போலீஸ்காரங்களை நினைச்சுத்தான் பயப்



படறேன். மாட்டிக்கிட்டா நம்ம ஒவ்வொருத்தர் குடும்ப மானமும் கப்பலேறிடும்...''

சீனுவின் பயவருத்தப் பேச்சு சொச்சமுள்ள அறுவரின் ஊடே ஒரு மின் வெட்டாய் குறுக்கிட்டு அவர்களை அலுக்கியபோது பிருதிவி ராஜனுக்கு கொஞ்சம் கிறல் பட்ட மாதிரி கோபம் வந்தது.

''நாம சுருட்டப் போறது பக்கா பாவப் பணம். கணக்குல வராத கறுப்புப் பணம். போலீசுக்கு போகச் சொல்லி தள்ளினாக்கூட எதிராளி போக மாட்டான்; போனாலும் கவலையில்லை. நம்மளைப் பிடிக்க முடியாது. அதுக்கு நான் கியாரண்டி!''

- வார்த்தைகளை கத்தாக் குறையாக இறுக்கமாக நெரித்து அழுத்தமாய் பேசியவனை ஆறு பேரும் கொஞ்சம் ஆறுதல் வந்த மாதிரி பார்த்தனர்.

''ஓ.கே... காரியத்துல இறங்குவோம்'' என்றனர்.

'அலுங்கலும் பிதுங்கலுமாய் அளவுக்கு மீறி ஓடி விட்டேன். விரைவில் கொட்டை எடுக்காத பேரிச்சம்பழங்களுக்கு நான் தயாராகி விடுவேன்' என்பது மாதிரி அந்த பஸ் நின்று கொண்டிருந்தது.

விருது நகர் தம்பிச் செட்டியார் '56-ல் லட்சத்துக்கு கொஞ்சம் குறைய வாங்கிய அதன் கிழட்டுத் தனத்தை குறுக்கும் நெடுக்குமாய் ஓடியவாறு ஒட்டிக் கிடக்கும் மட்ட ரகமான வண்ணங்கள் மூடப் பார்க்க - அதையும் மீறி அசடு வழிந்த அதனுள் எண்ணி நான்கு பேர், நான்கே நான்கு பேர்!

வெளியே எடுபிடி ஒருவன் 'புல்லூர், புல்லூர், புல்லூர்' என்று புலம்பிக் கொண்

டிருந்தான். டிரைவர் கைக் கெடிகாரத்தைப் பார்த்தார். பின் 'இந்நேரம் விருது நகர் போயிருக்கணும்!' என்று அடி பட்ட அணில் மாதிரி முனங்கினார். தொடர்ந்து...

''பெருலதான் புல்லு இருக்குது. ஊருல கருவேல மரம் கூட கிடையாது. அந்த காஞ்சப்பய ஊருக்கு பாதை கூட ஒழுங்கா இல்லை. ஊருக்குள்ளறையும் நாலு ஊடு தேறாது. அந்த ஊருக்கு தெனம் நாலு ட்ரிப் போய் வரணும்கிறது எங்க தலையெழுத்து'' என்றார்.

''எண்ணே கெடந்து சாவறீங்க. பேசாம ஒட்டை - கூட்டம் அதிகமா இருக்கற திருமங்கலம், காரியாபட்டிக்கு மாத்திக்கிட வேண்டியது தானே?'' - கண்டக்டரின் பக்கம் கேட்டுக் கொண்டே திரும்பினார் ஒரு பயணி.

''அட நீ வேற... வெவரமில்லாமப் பேசி என்னை சூடாக்காதே. இந்த ஒட்டை வண்டியை இந்த ரூட்லதான் விடணும்னு ஆர்.டி.ஓ. ஆபீஸ்ல சொல்லி விட்டாங் கய்யா. இல்லாட்டி காயலாங்கடைக்கு அனுப்புங்கறது அவங்க கட்சி. ஏதோ இந்த மட்டும் ஒரு பொட்டல் காட்டுக்கு போக்கு வரத்து வசதி பண்ணாங்களேன்னு ஆறுதலா நினைச்சுக்கிட வேண்டியது தான்.

ஆளு வர்றது சில நாள் டீசலுக்குக் கூடப் பத்தமாட்டேங்குது...

பாரு... புறப்பட வேண்டிய நேரத்துக்கு மேல அரைமணி ஆகியும் டிக்கட் பத்து சேரலை. சரிசரி... இனியும் காத்திருந்தா வழி டிக்கெட்டை பின் வண்டிக்காரன் அழுத்திருவான். ரை... ரை...''

கண்டக்டர் தன்னோடு சம்பாஷித்த பயணியை மீறி குரலை இறைக்க, டிரைவர் 'கடாமுடா' என்று கண்டதைத் தட்டி



உதைத்து ஸ்டார்ட் செய்து பஸ்ஸை நகர்த்திய போது காத்திருந்த மாதிரி ஓடி வந்து ஏழு பேரும் ஏறினர்.

ஏழு பேரும் ஏழு விதமாக உருமாறியிருந்தனர்!

காரனேஷன் காலனி வந்தது.

காளியப்பன் கனத்த மடியோடு ஏறினார்.

கனத்த மடி என்றால் பைசா சுத்தமாய் 'இருபத்தி இரண்டே கால் லட்சத்து இரு நூற்றைம்பது ரூபாய்.' அதில் இருநூற்றைம்பது ரூபாய் மட்டும் மடியிலும் சொச்சம் அவரது வலது கை இறுகப் பிடித்திருக்கும் வி.ஐ.பி. சூட்கேஸ்களிலும் பதுங்கி இருந்தது.

பிருதிவிராஜனை காளியப்பனுக்கே அடையாளம் தெரியவில்லை.

ஆறுமாசம், நாலு வாரமாய் தன்னிடம் வேலை பார்த்து மாசம் இரண்டாயிரம் என்று சம்பளம் வாங்கும் தனது தீப்பெட்டி ஆபீஸ் ஊழியனை அடையாளம் காண மாட்டாது ஜன்னலோரமாய் சரிந்து கிடந்த காளியப்பன், பினாமி பெயரில் இருபத்தி இரண்டே கால் லட்சத்துக்கு, தான் புல்லூரில் வாங்கப் போகும் இருபத்தி இரண்டு ஏக்கர் மற்றும் பதினொரு சென்ட் நிலப்பரப்பை நினைத்தபடி மெல்ல கண் மூடினார்.

பஸ் - சந்திக்கும் பள்ளங்களையெல்லாம் மார்கழியாக நினைத்து நடுங்கிக் குலுங்கி விட்டு, மேடுகளிலெல்லாம் வானரத் தனமாய் ஏறியபடி, கருத்த தார்ச் சாலையின் இருபுறத்து புளியமர நிழல்களை வேண்டாத பெண்டாட்டி மாதிரி ஒதுக்கித் தள்ளிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தது.

சீனு பாண்ட் பாக்கெட்டை தொட்டு துப்பாக்கி பிஸ்டலை வருடிக் கொடுத்த வனாய் 'நடுக்காடு வரும் வரை பொறுத்திரு பிரதர்' என்றான்.

ஹமீதுவும் பிச்சுவாவை வருடி அதையே சொல்லிக் கொண்டான். கோபாலும், ராகவனும் தங்களுக்குத் தெரிந்த பிளாக் பெல்ட் கராத்தேவில் மனசுக்குள் 'ஹூ.. ஆ' என்றபடி இழுத்தனர்.

மௌலிக்கு இலேசாய் வயிற்றில் பயப் பள்ளம்.

காரியம் கச்சிதமாக முடிந்து கைக்கு காசு வந்து சேரவேண்டுமே எனும் கவலை.

பிருதிவிராஜனின் பார்வை காளியப்பன் மேலேயே இருந்தது. தலைப்பாகையும், சிங்குத் தாடியும், வட்ட கூலிங் கிளாசும் பாரமாய் முகத்தை இறுக்கி நமைந்து கொண்டிருந்தன. சகித்துக் கொண்டு காளியப்பனிடம் ஊன்றினான்.

**காளியப்பன்:** 'காளிமார்க் தீப்பெட்டி தொழிற்சாலை'யின் ஐம்பது வயது நிரம்பிய முதலாளி. பத்து லட்சம் முதலில், நாளொன் றுக்கு நாற்பத்தி ஆறு பேருக்கு வேலை தந்து மாசம் ஆயிரம் குரோஸ் தீப்பெட்டிகளை ஆமதாபாத்துக்கும் ஹைதராபாத்துக்கும் அனுப்பும் மகா பேர்வழி.

எப்படியும் நூறு குரோஸ் பெட்டியை யாவது போலி எக்ஸைஸ் வரி லேபிளை சாமர்த்தியமாய் ஒட்டி அரசாங்கத்தை ஏமாற்றும், அசகாய சூரத்தனம் மிகுந்த, காதில் கடுக்கன் அணிந்த நபர்!

பிருதிவிராஜன் நிமிர்ந்து நின்று படிப்பை சொல்லி வேலை கேட்ட போது 'பார்க்கலாம்' போட்டு விட்டு சிவகாசி எக்ஸைஸில் தாய்மாமன் வேலையில் இருப்பதாக, ரீல்



விட்டபோது 'வாடா என் மாப்ள' சொன்ன சுருட்டு பிடிக்கும் உதட்டிற்கு சொந்தமானவர்.

பிறந்த நாளிலிருந்து இன்று வரை யாரையும் நம்பாத, கட்டிய மனைவியைக் கூட சந்தேகப்படத் தயங்காத நிலப்பிரபு. (ஸ்ரீவில்லிபுத்தூரில் பத்து ஏக்கர், ராஜபாளை யத்தில் மாந்தோப்பு, தென்காசியில் புஞ்சை வயல், புளியங்குடியில் காளியப்பன் காலனி, சிவகாசியில் காளி நிவாஸ் எனும் கலர் பங்களா. அது தவிர கம்பிக்குடியில் சில ஏக்கர்கள்.) நில உச்சவரம்பு திட்டம் கூர்தீட்டப்பட்டதால் தான் அகப்படக்கூடாது என்பதற்காக முன் எச்சரிக்கையாக பினாமி பெயர்களில் - வேறு வழியின்றி - வாங்கிப் போடப் போய் கொண்டிருக்கும் பேர் வ்ழி.

காசு கருப்பாய் சேர்ந்தால் எந்த நேரத்திலும் எவன் வேண்டுமானாலும் வந்து பூட்டை உடைக்கலாம் என்பதால் இப்படி மண்ணாய் மாற்றும் அவரது திட்டம் ஒருநாள் எப்படியோ பிருதிவிராஜனுக்கு புள்ளி விபரம் பிசகாமல் தெரியவர, தனது அருமை நண்பர் குழுவைக் கூட்டி ஆலோசித்தான்.

அதன் எதிரொலிதான் சாமர்த்திய வழிப்பறிக்குத் தயாரான உருமாற்றங்கள்; திட்டங்கள்!

*சந்தேகங்கள்:*

''பிருதிவி! உம் மொதலாளிக்கு கார் கிடையாதா?''

''பத்துக் கார் வெச்சுக்கற வசதி உண்டு. இருந்தாலும் தான் சாதாரண பணக்காரன்னு ரொம்பப் பேரை நம்ப வைக்க கார் வெச்சுக்காம இருக்கான்!''

''கஞ்சனா?''

''தார்ப் பாயில வடி கட்டின கஞ்சன். ஆனா பயங்கரமான ஆளு.''

''தொகை கேஷா கொண்டுகிட்டு வருவானா? இல்லை செக்காவா?''

''பேங்க் பக்கமே கேஷ் பை கொண்டு போனது கிடையாது. எல்லாம் பைகேஷ் தான்.''

''பெக்கூலியர் கேஸ் தான். ஆளை புல்லூர்லையே வளைச்சா என்ன?''

''இம்பாசிபிள். நாம மாட்டிக்க நிறைய வழி உண்டு. ஊருக்குள்ள அவங்க ஆளுங்க அதிகம். வண்டியிலேயே வெளையாடிடறது பெட்டர். எந்த ஒரு பேசஞ்சரையும் நாம் 'டச்' பண்ண வேண்டாம். இவனை மாத்திரம் குறி வெச்சு அழுத்தினா போதும். நடுக்காடு ரூட்ல வயலும் கிடையாது; வரப்பும் கிடையாது. ஒரு குடிசை கூட இல்லாத கருவேலங்காடு அது. தொண்ணூறு சதம் ஒரு ஈ காக்கையை அந்த ரூட்ல பார்க்க முடியாது. நாம அந்த இடத்துல துப்பாக்கியை எடுத்து பஸ்ஸை நிறுத்தி காரியத்தை முடிச்சிடலாம். நடுக்காட்டுல நம்ப ஆளு எவனாவது ஒரு காரோட தயாரா இருந்தாபோதும், ஓட வசதியா இருக்கும்.''

''பஸ் டிரைவரும், கண்டக்டரும், அப்புறமா போலீசுல புகார் பண்ணா?''

''போலீசுக்கு போறது முக்கியமில்ல. போலீசுல காளியப்பன் தன் பணம் போச்சுன்னு ஒத்துக்கறதுல இருக்கு. தலைகீழா நின்னாலும் ஒத்துக்க மாட்டான். நூறோ ஆயிரமோ போனதா சொல்வான். அவ்வளவு பெரிய பரபரப்பான கேஸா இது ஆக முடியாது. நாம மாறு வேஷத்துல இருக்கறதுனால பிரச்சினையும் வராது. மீறி வந்தா பார்த்துப்போம். தொட்டதுக்கெல்லாம் பயந்தா காரியம் முடியாது...''



ஒரு பொட்டல் காட்டின் முதுகின் மேல் கருப்பாய் கம்பளிப் புழுமாதிரி படுத்திருந்தது புல்லூர் சாலை. கிழிசல் துணி மாதிரி அதன் உடம்பில் ஏக பள்ளம் மேடுகள்.

ஜிகுஜிகுவென்ற சூரியனால் உண்டான கானல்நீர் நதி தளதளக்க ஓடிக் கொண்டிருந்தது. சகாரா மாதிரி கிடந்த நிலப்பரப்பில் வெகு தொலைவில் கருவேலங்காடு ஆரம்பமாகியிருந்தது.

நூறு ஏக்கருக்குக் குறைவில்லாத பரப்பில் கர்ண கடூரமாய் காட்சி தரும் அதன் நடுவே சாலை நுழைந்து சில கிலோ மீட்டரில் புல்லூரை எட்டிப் பிடிக்கவிருக்கும் இடத்தில் அம்பாசிடர் ஒன்றின் மேல் ஃபில்டர் வில்லை சாம்பலாக்கிக் கொண்டு சிந்தனையில் இருந்தான் லாரன்ஸ்.

வீசிக் கொண்டிருக்கும் ஆடிக் காற்று தலைமுடியைக் கோதிக் கொண்டிருந்தது. பார்வையோ சாலைமேலேயே இருந்தது. கை கடிகாரத்தைப் பார்த்தான். மணி பதினொன்று.

புல்லூரின் புழுதி பறக்கும் வீதிகளில் 'கோவிந்தா கோவிந்தா' என்றபடி உருண்டு கொண்டிருந்தான் ஜெயராம்.

''எலே பொச கெட்டவனே...

இந்த ஊருலபோய் கோவிந்தா போட்றியேடா... காலணா பேருமா? போய் மதுரை விருதுநகர்னு உருளுடா...'' வீதிக்காரர் ஒருவர் இடக்காய் சிலாகித்துக் கொண்டார் ஜெயராமனை பார்த்து.

''ஜெயிலுக்குப் போய்வந்த பயலுக்கு எங்கிருந்து வந்துச்சு இம்புட்டு பக்தி? ஏண்டா காது குத்துறியா? உண்டியல் காசு உனக்கா

ஏழுமலையானுக்காடா?'' - இன்னொருத்தர் கேட்கிறார்.

பொறுக்காமல் எழுந்து நின்ற ஜெயராமன் நாமம் போட்ட தனது பெரிய உண்டியல் குடத்தைப் பார்த்தான். பெருமூச்சு விட்டான்.

விறுவிறு என்று கால்நடையாகவே நடக்க ஆரம்பித்தான் காரியாபட்டிக்கு!

புல்லூர் சாலையில் இப்பொழுது குதூகலத்துடன் பாடலாக உருமாறி ஒலிக்க ஆரம்பித்திருந்தது ''கோவிந்தா-கோவிந்தா...''

இடைவழியில் தெரிந்தவர் எச்சரித்தார்.

''எலே... பிச்சை எடு. தப்பில்லை. சாமி பேரைச் சொல்லி ஊரை ஏமாத்தாதே. அதுலையும் அந்த திருப்பதி சாமி பொல்லாத சாமி. அவர் பேரைச் சொல்லிக் காசை வாங்கிட்டு ஜல்சாப் பண்ணுனே நீ வெளங்காமப் போயிடு வெடா...'' என்றார்.

''நைனா... எனக்குத் தேவை பம்பாய் போறதுக்குத் தேவையான துட்டு. அதுக்கு மேல எத்தினி லட்சம் வந்தாலும் - அது எங்கம்மா சத்தியமா - அது அந்த திருப்பதி சாமிக்குதான். எனக்கும் திருப்பதிசாமி பத்தி நல்லாத் தெரியும் நைனா'' என்றான் ஜெயராம்!

**ப**ஸ் புல்லூர் செல்லும் சாலைக்குள் நுழைந்துவிட்டிருந்தது. வளைசல் இல்லாத ஆளரவமற்ற சாலை பார்த்து டிரைவர் தெம்போடு ஆக்சிலேட்டரை அழுத்த வேகம் எழுபதை எட்டியது.

ஸ்டியரிங்கிலிருந்து கைகளை எடுத்து லாவகமாக சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்து விட்டு ஸ்டியரிங்கைத் திரும்ப பிடித்தபடி புகையை உமிழ்த்தியபோது புகை கொஞ்சம்



நெஞ்சுக்குள் புகுந்த மாதிரி நெஞ்சு கரித்தது.

எதிரே நடுக்காட்டின் கருவேல மரங்கள் தெரிந்தன.

நல்ல நிழலும் வேகமான காற்றும் வரும் என்று மனசு சொன்னபோது டிரைவரிடம் இருமல் வந்தது.

அதே சமயம் இதுதான் காலம் என்று சீனு துப்பாக்கியை எடுத்த வண்ணம் நிமிரப் பார்த்தான். ஹமீது பிச்சுவாவைப் பிடித்துக் கொண்டு தயாராகிவிட்டான்.

திடீரென்று இவைகளால் தாக்குதலுக்கு ஆளாகப் போகும் டிரைவரின் மார்பில் சற்றும் எதிர்பாராத விதமாக 'சுருக் சுருக்' என்றவலி!

வெகு வேகமாய் மார்பைப் பிராண்டிய அந்த 'சுருக்சுருக்', டிரைவரை நிலை சாய்க்கப் பார்த்தது. மூச்சுக்குழலை மாரடைப்பாய் வந்து அடைத்தது. இதற்குள் பஸ் தடம் மாறி சாலையை விட்டு இறங்கி விட்டிருந்தது.

எல்லோரும் ஒன்றும் புரியாமல் திகைத்த அந்த நொடிகளில் அந்த பஸ் பொட்டணமாய் உருண்டு பாதை ஓர சரிவில் சறுக்கி மரம் ஒன்றின் மேல் மோதி...

**ப**ஸ்ஸை எதிர்பார்த்து வியர்வை சொட்டக் காத்திருந்த லாரன்சுக்கு கோபம் கிளறிக் கொண்டு வந்தது.

''ஏன் இன்னும் பஸ் வரலை? இங்கதானே காத்திருக்க சொன்னாங்க? குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு மணி நேரம் மேலையே போயிடிச்சே...''

- கேள்வியும் குழப்பமுமாக காருக்குள் ஏறியபின் புல்லூர் சாலை விருதுநகர் செல்லும் பிரதான சாலையை எட்டிப் பிடிக்கும், அந்த ஆரம்பம் வரை சென்று

பார்ப்பது என்று உத்தேசித்து காரைக் கிளப்பினான்.

கருவேலங் காட்டைத் தாண்டி கார் வழுக்கி பிரதான சாலையை எதிர் செல்லத் தயாராகிவிட்ட அந்த நீண்ட சாலையில், கார் இறங்கி வேகித்த போது எதிரே பளீரென்று தட்டுப்பட்டது தலைகுப்புறக் கவிழ்ந்து கிடக்கும் புல்லூர் பஸ்.

சுற்றிலும் ரத்த வெள்ளத்தில் துளியும் பிரக்ஞையின்றி அவனது நண்பர்களோடு, காளியப்பனும், பிரயாணிகளும் கிடக்க காளியப்பன் கொண்டு வந்திருந்த வி.ஐ.பி. சூட்கேஸ் கொஞ்சம் தள்ளிக் கிடந்தது.

ஓடிப் போய் கையிலெடுத்து திறந்து பார்த்தவன் அதன் வெறுமையைப் பார்த்தும் நண்பர்களின் நிலையைப் பார்த்தும் கதி கலங்கி மயக்கத்தில் விழப் பார்த்த அதே சமயம்...

உண்டியல் சுமை தலையை அழுத்த ஓட்டமும் நடையுமாக ஓடிக் கொண்டிருந்தான் ஜெயராம்.

''சாமி... நான் சொன்னமாதிரி எனக்கு அல்ப காசு போதும். சொச்சமெல்லாம் உனக்குத்தான். பணம் திருட்டுப் பணம் போல இருக்கு! மயங்கிக் கிடக்கறவங்களுக்கு மத்தியில் துப்பாக்கி கத்தியெல்லாம் கிடக்குதே... யார் ஊட்டுக் காசோ?

இனி உன் பாடு, அவங்க பாடு...'' - வியர்த்து வடிய படபடப் போடும், லட்சங்களோடும் ஓடும் அவனுக்கு ஆறுதலாகக் காற்று மட்டும் சற்று பலமாக வீச ஆரம்பித்தது.

முற்றும்.